பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 29 செவ்வாய்க்கிழமை (12-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:198

# தற்காலிகமாக தடையை நீக்க அரசு இணங்கும்?

## கொழும்பில் தகவல்

கொழும்பு,ஜூன்12

**நோர்வேயின் அனுசரணையுடன் இடம்பெற்று வந்த - இனப்பிரச்சினைத் தீர்வுக்கான - சமாதான முயற்சிகளில் முன்னகர்வு ஏற்படுத்தும் நோக்குடன் விடுதலைப் புலிகள் மீதான தடையைத் தற்காலிகமாக நீக்குவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் முன்வரலாம்.**

**அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் - ஏரிக்கரைப் பத்திரிகையான - 'டெய்லி நியூஸ்' இத்தகவலை நேற்று வெளியிட்டது.**

இது தொடர்பாக அப்பத்திரிகை நேற்று வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தம் மீதான தடைகளை நீக்கப்பட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கை தொடர்பாக அரசாங்கம் சிறிது இலகுத் தன்மையையும் வசதியையும் செய்ய முன்வரலாம்.

ஆனால் இந்த விவகாரங்கள் தொடர்பில் ஆளுங்கட்சியில் இரண்டு வேறுபட்ட அபிப்பிராயங்கள் காணப்படுவதாகத் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கும் இந்த வேளையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஊர்காவலர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன்12

அம்பாறையிலிருந்து கிழக்கே 30 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள வெகரகம என்ற இடத்தில் பொலீஸ் காவல் நிலை மீது கடந்த சனியன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இத்தாக்குதல் சுமார் 10 நிமிட நேரம் நீடித்ததாகக் கூறப்படுகிறது. (உ-ஒ)

## ஒட்டுவெளியில் சிப்பாய் பலி

கொழும்பு,ஜூன்12

கொடிகாமத்துக்கு தென்கிழக்கே நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் ஒட்டு வெளி என்னும் இடத்தில் கடந்த சனியன்று கண்ணிவெடியில் சிக்கி சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

பிரஸ்தாப சிப்பாய் குளிக்கச் சென்ற சமயமே கண்ணியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.(உ-ஒ-3)

## பலகல்லவின் பதவிக் காலம் அடுத்த மாதத்தில் முடிவுறும்?

கொழும்பு,ஜூன்12

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவின் தற்போதைய பதவிக் காலம் அடுத்த மாதம் 18 ஆம் திகதியுடன் பூர்த்தியாகும் என்றாலும், அவரது பதவிக்காலத்தை ஜனாதிபதி மேலும் நீடிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

லெப்டினன்ட் ஜெனரல் பலகல்லவை ஓய்வுபெற அனுமதித்து விட்டு, அந்த இடத்திற்கு ஏற்கனவே ஓய்வுபெற்றுச் சென்றுவிட்ட மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை நியமிப்பதற்கு அரசுத் தரப்

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஆர்ப்பாட்டப் போராட்டங்களுடன்

## நம்பிக்கையில்லாப் பிரேரணை 19 இல் நாடாளுமன்று வருகிறது

கொழும்பு,ஜூன்12

அரசுக்கு எதிராக எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர முயற்சி மேற்கொண்டுள்ள ஐ.தே.கட்சி -

அதற்கு முன்பாக - ஏக காலத்தில் - நாடளாவிய ரீதியில் - நாற்பதுக்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக இம்மாதம் முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் அக்கட்சி முடிவு செய்துள்ளது.

இதற்காக அக்கட்சி கிராமங்கள் தோறும் பிரசார நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இதுவரை ஐ.தே.கட்சியின் 77 உறுப்பினர்கள் கையொப்பம் இட்டுள்ளனர் என்றும் -

ஜே.வி.பி., தமிழ்க்கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளின் கையொப்பங்களைப் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் - ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

### 50 இராணுவத்தினருடன் சென்ற

## படையினரின் விமானத்துக்கே ஏவுகணை மூலம் இலக்குவைப்பு

### இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,ஜூன்12

வில்பத்துக் காட்டுக்கு மேலாக கடந்த ஏழாம் திகதி 50 படையினருடன் சென்று கொண்டிருந்த 'அன்ரனோவ் - 32' ரக விமானத்தை நோக்கியே விடுதலைப் புலிகள் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணரத்ன தெரிவித்தார்.

கடந்த ஏழாம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக உத்தியோக பூர்வமாக அவர் நேற்று விடுத்த அறிக்கையிலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சம்பவம் நடந்த அன்று உக்ரெய்ன் தயாரிப்பு 'அன்ரனோவ் -32' ரக விமானம் அனுராதபுரத்திலிருந்து பலாலி கூட்டுப்படைத்தளம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஐம்பது படையினருடன் மிக உயரமாகப் பயணித்துக் கொண்டிருக்கையிலேயே புலிகளின் தாக்குதல் இடம்பெற்றது.

ஏவுகணை எதிர்ப்புச் சாதனம் அப்போது விமானத்தில் செயற்படுத்தப்பட்டிருக்காததால் தாக்குதல் குறித்து விமானிகள் எதையும் அப்போது அறிந்திருக்கவில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தை ஒக்ரோபரில் கலைப்பதற்கு தயாராகிறார் ஜனாதிபதி?

கொழும்பு,ஜூன்12

வீழ்ச்சியடையும் பொருளாதாரம், சிறுபான்மைக் கூட்டணிக் கட்சிகளின் நியாயமற்ற நிபந்தனைகள், ஐ.தே. கட்சியால் முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை போன்ற எதிர்பாராத பல நெருக்கடிகளை எதிர்கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தற்போதைய அரசின் ஒரு வருடகால ஆட்சி பூர்த்தியானதும் - அதைக் கலைப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தில் தேவைப்படுத்தப்பட்ட ஆகக்குறைந்த காலம் பூர்த்தியானதும் - அநேகமாக அடுத்த ஒக்ரோபரில் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் புதிய தேர்தலுக்கு உத்தரவிடக்கூடும்.

இவ்வாறு அரசியல் ஆய்வாளர்களும் ராஜதந்திரிகளும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் சிறுபான்மை இனக் கூட்டணிக் கட்சிகளான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்துத் தூதரகக் குழு நாளை யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

கொழும்பில் உள்ள நெதர்லாந்து தூதரகத்தின் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நாளை யாழ்ப்பாணம் வருகின்றது.

இந்தக் குழுவில் தூதரகத்தின் முதலாவது செயலாளர் அனிக்கேஎம் சுகுந்தர், இரண்டாவது செயலாளர் டொரின் ஈ.வான் நொறீன், ஹேர்மன் ஈ.ஆர.பொய்கோபன் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

யாழ்பபாணத்தில் தங்கியிருக்கும் நேரத்தில் இக்குழுவினர் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டத்தரணிகள் சங்கம், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான அமைப்பு, அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவர்.

யாழ்.மேலதிக அரச அதிபரையும் இக்குழு சந்திக்கவிருக்கின்றது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை 'உதயன' அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைக் குழுவினர் சந்திக்கவிருக்கின்றனர். (உ-3)

### நாளைய வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

(விவரம் 2ஆம் பக்கத்தில்)

## லிப்டன் சதுக்கத்தில் நேற்று ஐ.தே.கட்சி மறியற்போர்!

### மங்களவின் கொடும்பாவியும் எரிப்பு

கொழும்பு,ஜூன்12

கொழும்பு மாநகர சபையின் அதிகாரங்களை நகர அபிவிருத்தி அதிகார சபை பறித்து வருவதாகத் தெரிவித்து அதனைக் கண்டித்து ஐ.தே.கட்சியின் ஏற்பாட்டில் நேற்று நண்பகல் லிப்டன் சதுக்கத்தில் மறியற் போராட்டம் ஒன்று இடம் பெற்றது.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜெயசூரிய, காமினி அத்துக்கொறல, ஏ.எஸ்.எம். அஸ்வர், ரவி கருணநாயக்க, ஜெயலத் ஜெயவர்த்தன ஆகியோரும் மற்றும் ஐ.தே. கட்சி மாநகர சபை உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர்.

மறியலில் ஈடுபட்டோர் நகர அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீரவின் கொடும்பாவியை பிரேதப் பெட்டி ஒன்றில் எடுத்து வந்து அங்கு அதனைத் தீயிட்டுக் கொளுத்தினர். (உ-3-4)

## விடுவிக்கக் கோரி மனுத் தாக்கல்

கொழும்பு,ஜூன்12

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 6 பேர், தம்மை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் தம்மை பிணையில் செல்ல அனுமதியளிக்கவில்லை என்று இவர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய குற்றப்புலனாய்வு அதிகாரிகள், சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ஒ)

### வடக்கு - கிழக்கு ஆஸ்பத்திரிகளில்

## டாக்டர்கள் வேலைநிறுத்தம் வைத்திய சேவைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்12

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் டாக்டர்கள் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்ததை அடுத்து, ஆஸ்பத்திரிகளின் வெளிநோயாளர் பிரிவு உட்பட வார்ட் வேலைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தன.

வடக்கு - கிழக்கில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, கல்முனை, திருமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் இன்று துக்கம்

மட்டக்களப்பு,ஜூன்12

மட்டககளப்பு கொக்கட்டிச்சோலையில் 1991ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி 150க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலையுண்ட சம்பவத்தை நினைவு கூரும் வகையில் இன்று துக்கம் அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் உள்ள பொது அமைப்புக்களே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

கடைகளைப் பூட்டியும் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தும் வீடுகளுக்கு முன் கறுப்புக்கொடி பறக்கவிட்டும் துக்கம் அனுஷ்டிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (உ-3-4)

# குரு பார்த்தால் கோடி பாவம் நீங்கும்

## நாளைய வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

| | | | |
|---|---|---|---|
| 5 | வெ. | சூ. புத. சனி | வியா. ராகு |
| சந். | இராசிச் சக்கரம் | | 9 |
| 8 | | | 10 |
| கேது செவ். | ல | 12 | 11 |

*நிகழும் விஷு வருஷம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை (13.06.2001) பிற்பகல் 5.57 மணி (பழைய நேரம்) விருச்சிகம் இலக்கணத்தில் மிருகசீரிடம் 3ஆம் பாதத்தில் மிதுனம் இராசிக்கு வியாழ பகவான் மாறுகிறார்.*

### மேடம்

தொட்டதொழில் பட்டுவிடுமோ என்ற ஏக்கம். மாயக்கனல் சிந்தனையில் எண்ணாத எண்ணமெல்லாம் வட்டமிடும். உடன் பிறந்தவர்களுககு மாற்றங்கள் சுபகருமங்கள் நிறைவேறும். படிப்படியான வெற்றிப்படிகளில் ஏறி வந்திடுவீர்கள். புதிய தொழில் தொடங்க ஒரு கருத்துண்டு. காரியம் கைகூட நண்பர்கள் உதவி செய்வார்கள். இடமாற்றங்கள் வரலாம். ஏழரைச் சனி ஒரு பக்கம்; 3இல் வியாழன் மறுபக்கம். போராட்ட உணர்வு வந்தாலும் வெற்றி பெற நிச்சயமாய் வழி உண்டு. களைப்பு, நெஞ்சு வருத்தம், வாய்வுத் தொல்லை என வந்து போகும். திடீரென களவுகள் போக இடமுண்டு. தோட்டத்துறை, தொழில்நுட்பத் துறையினர் நன்மை அடைவர்.

### இடபம்

காசு கனக்க வந்துவிடும். தாரத்தைத் திருப்திப்படுத்தும் அளவு உழைப்பு படிப்படியாக ஏறிவரும். வாக்கு மாற மனம் வராது. கோயிலுக்குப் போவதும் வருவதுமாக இருப்பீர்கள். தூர இடங்களிலிருந்து செய்திகள் வந்து மனமகிழ்வைத் தரும். திருப்பணிச் செலவுகள் அதிகரிகதும் அளவுடன் பேசவும் ஆவணி மாதத்துக்குப் பின்பு மாற்றங்கள் வரும். வயிற்று நோ, நரம்புப் பிடிப்பு வருத்தும். வாகனத்துறை, ஆசிரியத் துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் ஏற்படும்.

### மிதுனம்

உதயத்தில் உத்தமனாம் குரு வருங்காலம். உயர்வுகள் தானாக வந்து சேரும். உறவினர்கள் வரவேற்பார்கள். வரவுகள் தானாக வந்து சேரும். நிறைவுகள் தானாக வரும். களைப்பு, சலிப்பு, உடம்புநோ என்பன வந்து போகும். வியாபாரத் துறை, தபால்தந்திப் பகுதி, நகைத் துறை போன்ற துறையினர் நன்மை அடைவார்கள. குருத்துறையினருக்கு பொறுப்புக்கள் அதிகமாகும். உலக வாழ்வில் பட்டும் படாத நிலை தோன்றிவிடும்.

### கடகம்

செல்வாக்கு உள்ளவர்கள் செல்வாக்கு உள்ளவர்கள் என எண்ண முடியாது. தொழில் ஸ்தானத்தில் அவமானங்களால் மனவேதனை வர இடமுண்டு. அரச நெருக்கடி வரும். திடீர் கோபத்தால் பதற்ற நிலைவரும். ஆடி, ஐப்பசி, கார்த்திகை, மாதங்களில் மாற்றங்கள் நடக்கும். அரசியல், வியாபாரம், வங்கி போன்ற துறையினர்கள் மாற்றம் அடைவார்கள். நரம்பு, இரத்தம், சலவருத்தங்கள் வந்து போகும்.

### சிங்கம்

உண்மை எதிர்பார்ப்பு உன்னதத்தைத் தரும். தேடிய செல்வாக்கு நற்பலன்களைத்தரும். முயற்சிகள் வெற்றி கொடுக்கும். மெல்லெனப்பாயும் தண்ணீர் கல்லையும் ஊடுருவிப் பாயும் நிலை ஏற்படும். முழங்கால் பிடிப்பு, வயிற்றுநோ, கைகால் உளைவு என்பன வரும். உங்களுக்குக் குருபல வெற்றிகளையும் நன்மைகளையும் தந்திடுவார். நாரிப் பிடிப்பு, சளிவருத்தங்கள், வாய்வுத் தொல்லை வரும். ஆவணி, கார்த்திகை, மார்கழியில் நன்மைகள் அதிகரிக்கும். சட்டம், மருந்து, செய்தி, நிர்வாகத்துறை, குருத்துறை போன்றவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

### கன்னி

பத்தில் குருவர நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்படும். குடும்பத்தில் சிறப்புக்கள் அதிகரிக்கும். புதிய வாகனத்தில் ஓடித்திரிவீர்கள். பொருள் சேரும். நண்பர்களும் வந்து உதவிகள் செய்து தருவார்கள். புதுமைகள் அடிக்கடி வந்து போகும். ஆவணி தொட்டு ஒன்றுவிட்ட மாதங்களில் மாற்றங்கள் நடைபெறும். நாரிப்பிடிபபு, மூலவருத்தம், சிரசு, முதுகுநோ என்பன வருத்தும். குருத்துறை, செய்தித்துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

### துலாம்

இலாபஸ்தானத்தில் குரு வருகின்றான். பதவியில் உயர்வு வரும். வருமானம அதிகரிக்கும் படிப்படியான ஏற்றம் ஏற்படும். புத்திரர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். ஆடி, ஐப்பசி மாதங்களில் நன்மைகள் அதிகரிக்கும். சளி, ஈரல், நரம்பு, தோல்வருத்தங்கள் வந்து சேரும். சட்டம், பிரயாணம், வங்கி, குரு, நகை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். இடமாற்றங்கள் நன்மை தரும்.

### விருச்சிகம்

உங்கள் கடமையில் திறமைகள் ஏற்படும். புத்திரர், சகோதரங்களால் வேதனை வரும். பொருள்கள் களவு போக இடம் உண்டு. பொருள் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்கள் கொடுக்கும் காலமாகும். ஆடி, ஆவணி, கார்த்திகை மாதங்க ளில் நன்மைகள் கொடுக்கும். விஷ பீடைகள் தேடிவரும். வாய்வு, நாரி நோ சர்வசாதாரணம். அரசியலில் நன்மை, இரும்பு, மருந்துத்துறையினர்களுக்கு நன்மைகள் கொடுக்கும். தெய்வவழிபாட்டால் பல நன்மைகள் பெறுவீர்கள்.

### தனுசு

வீட்டில் கலகலப்பு ஏற்படும். புத்திரர் சுகம் அடைவார்கள். நகைக்காகவோ, புடைவைக்காகவோ பொருள்கள் செலவு செய்வீர்கள். புதிய இடங்கள், ஸ்தலங்களுக்குப் போய் வருவீர்கள். பொருள் செலவு கள் அதிகரித்தபடி இருக்கும். ஆனி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் மாற்றங்கள் சொல்லாமல் வரும். பித்தம், சளி வரும். தோலில் வருத்தம், உரசல் காயங்கள் வரலாம். குரு, சட்டம், வங்கி, பிரயாணம், போன்ற துறைகளில் நன்மைகள் ஏற்படும்.

### மகரம்

மாற்றங்கள் சகஜம். அரச அதிகாரிகளால் தொழில் ஸ்தானங்களில் வீண்பழி கேட்க நேரிடும். குடும்பத்தினருக்கு மனக்கலக்கங்கள் வர இடமுண்டு. அரச உபாதைகள் வரலாம். ஏமாற்றங்கள் வர இடமுண்டு. பித்தம் அதிகரிக்கும். நரம்பு சோரும். பதட்ட நிலைவரும். பிரயாணம், செய்தி, கலை போன்ற துறைகளில் இலாபங்கள் வரும். கடல்துறையினருக்கு மாற்றம் ஏற்படும்.

### கும்பம்

பொருள் சிறப்பு கொடுக்கும். தொழிலில் சிறப்பு வரும். பெரியவர்கள் உதவுவார்கள். படிப்படியான மாற்றங்கள் ஏற்படும். இதுவரை முடியாத நினைத்த காரியம் ஒன்று நிறைவேறும். ஆறு எட்டு, பத்து, பதினொராம் மாதங்களில் மாற்றங்கள் ஏற்படும். சளி, பித்தம், வாய்வுத் தொல்லை தரும். பிரயாணம் வந்தாலும் நனமையில்லை. தொழில்நுட்பத துறை, ஆசிரியத்துறை, சட்டத்துறை, ஹோட்டல்த்துறை போன்ற துறைகளில் நற்பலன்கள் அதிகரிக்கும்.

### மீனம்

தேடிய தேட்டத்தால் சிறப்பு வரும். வீடு, காணி சேரும். குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் மாற்றங்கள் வந்து சேரும். வாகனச்சிறப்பு, வீட்டுவசதி என்பன வரும். காணி பூமி சேரும். ஆனி, ஆடி, புரட்டாதி, மார்கழி மாதங்களில் நன்மைகள் ஏற்படும். சளி, நரம்பு நோ, பித்தமயக்கம் வரும். கல்வி. பிரயாணம், அரசியல் போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும், செய்தி, கலை போன்ற துறையினருக்கு வருமான அதிகரிப்பும் ஏற்படும்.

★

---

# கொழும்பு மேல்நீதிமன்ற வழக்குகள் சில வடக்குக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்12

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலரின் வழக்குகளை யாழ். மேல்நீதிமன்றத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மனித கௌரவத்திற்கான மன்றம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தனது யாழ்.அலுவலகத்தில் சமுகம் அளிக்கும்படி அந்த மன்றம் கேட்டுள்ளது.

★ கந்தையா நாகரட்ணம் - நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

★ எஸ்.ஜெயபாலசிங்கம் - கைதடி வடக்கு, கைதடி.

★ திருமதி இராசாத்தி பரமநாயகம் - முள்ளி வீதி, அரியாலை.

★ பெர்னாண்டோ ஜசிந்தா - புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

★ செல்லத்துரை கனகலிங்கம் - நாவற்குழி தெற்கு, கைதடி.

★ சபாபதி சிதம்பரப்பிள்ளை - நாவற்குழி தெற்கு.

★ முத்துக்குமாரசாமி ஐயர் கணேசசர்மா - கைதடி வடக்கு.

★ பரமநாதர் செல்வராஜ் - கோயிலாக்கண்டி மத்தி, தச்சன்தோப்பு.

★ மகேஸ்வரி நடராஜ் - நீர்வேலி மத்தி.

★ திருமதி எம்.தவமணி - செருக்காபுலம், சுழிபுரம். (உ-3)

## துணைவேந்தர் துரைராசா நினைவாக

# யாழ்.பல்கலையில் நாளை இரத்ததான நிகழ்வுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜாவின் பதினொராவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததானம் வழங்கும் நிகழ்வும், அஞ்சலிக் கூட்டமும் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளன.

சமுதாய மருத்துவத்துறையைச் சேர்ந்த வாழ்நாள் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி), விவசாய பீடத்தைச் சேர்ந்த விலங்கு விஞ்ஞானத்துறைக் காப்பாளர் பேராசிரியர் அ.நவரட்ணராஜா ஆகியோர் அஞ்சலியுரைகளை நிகழ்த்துவர்.

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. (க-7)

# சமூக ஒருங்கிணைப்புக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்12

இளம் சமுதாயத்தினரை மீட்டெடுப்பதற்கான 'முரண்பாடுகளைத் தீர்த்தல்' தொடர்பான சமூக ஒருங்கிணைப்புக் கருத்தரங்கு குருநகர் சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் இக்கருத்தரங்குத் தொடர்கள் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த ஆண்டில் இவ்வாறான 25 கருத்தரங்குகள் மாணவர்களுக்கென நடத்தப்பட்டதுடன் இன்று நடைபெறவுள்ள கருத்தரங்கானது இந்த ஆண்டுக்கான 5 ஆவது கருத்தரங்கு என்று மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி அதிபர் எஸ்.எஸ்.தங்கராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர் திருமதி தனலஷ்மி விஸ்வநாதன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம், இளைப்பாறிய அதிபர் திருமதி புஷ்பா சின்னையா, யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் எஸ்.குமாரவேல் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

(க-10)

## வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருடன் தளபதி சந்திப்பு

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளை உறுப்பினர்களை 51ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் ஈ.டபிள்யூ. காமினி ஜயசுந்தர சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பு இன்று காலை 9 மணிக்கு 51ஆவது படையணியின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

## ஆயுதங்கள் மீட்பு

குடாநாட்டில் படையினர் கடந்த சனிக்கிழமை மேற்கொண்ட வெவ்வேறு தேடுதல் நடவடிக்கைகளில் பெருமளவு ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட கள நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறையிலிருந்து வடக்கே 11.5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சிவியாதுறையில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த வீடொன்றிலிருந்து, 9 கிளைமோர்கள், 10 டெக்னேட்டர்கள் மற்றும் வயர்கள் ஆகியவையும் -

நவாலி, சுதுமலை ஆகிய பகுதிகளில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட ரி56 ரவைகள், இயந்திரத்துப்பாக்கி ரவைகள்- அறுநூறு ஜி.பி.எம்.ஜி லிங்குகள் - மூன்று, எல்.எம்.ஜி, லிங்குகள்- இரண்டு மற்றும் ஒரு பசிலன் மோட்டார் துப்பாக்கி ஆகியவையும்-

படையினரால் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ-ஒ-4)

## ஆசிரியருக்குக் கொடுப்பனவு

புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைய உடுவில் தெல்லிப்பழைக் கோட்டங்களில் தரம்8, தரம்11 வகுப்புக்களில் சமூகக்கல்வி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கென மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டோருக்குரிய கொடுப்பனவுகள் நாளை புதன் கிழமை வழங்கப்பட உள்ளன.

கருத்தரங்கில் பங்குபற்றிய ஆசிரியர்கள் தங்களுக்குரிய கொடுப்பனவுகளை அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் வலிகாமம் கல்வி வலயத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.இராஜவரோதயம் கேட்டுள்ளார். (ஜ-152)

# நீராவியடி கனகசபை அவெனியூ மிக விரைவில் திருத்தப்படும்

## ஈ.பி.டி.பி. தரப்பில் உறுதிமொழி

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்நீராவியடிப் பகுதியில் உள்ள கனகசபை அவெனியூ மிக விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

ஈ.பி.டி.பியின் யாழ்.பொறுப்பாளர் நீகன், யாழ்.மாநகரசபை உறுப்பினர் கனகராஜா ஆகியோர் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்து தருவதாக தமக்கு உறுதிமொழி அளித்துள்ளனர் என நீராவியடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி. பிரதிநிதிகளிடம் கனகசபை அவெனியூ 30 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் -

இதனை அடுத்து வீதி திருத்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய ஈ.பி.டி.பி. பிரதிநிதிகள் நீராவியடிப் பகுதியில் உள்ள விதவைகள், இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும் தெரிவித்தனர் என மேற்படி சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட 'கெயா' நிறுவன இணைப்பாளர் நிக்கலின் மற்றும் உத்தியோகத்தர்கள் 65 அங்கத்தவர்களுக்கு சேமிப்புக் கணக்குப் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினர் என்றும்-செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## பொலீஸ் நிலையத்தில் பாலியல் சித்திரவதை:

# அறிக்கை தரக் கோருகிறது தொல்லை தவிர்ப்புக் குழு

கொழும்பு,ஜூன்12

பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்தில தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு தமிழ்ப் பெண்களை பாலியல் ரீதியில் சித்திரவதை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படி குற்றப்புலனாய்வுப் பொலீஸாரை தொல்லை தவிர்ப்புக்குழு கேட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி தொல்லை தவிர்ப்புக் குழுவிடம் கோரியிருந்தார்.

நேற்றுக் கூடிய தொல்லை தவிர்ப்புக் குழு இந்தக் கோரிக்கை குறித்து ஆராய்ந்த பின்னர் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கும்படி குற்றப்புலனாய்வுப் பொலீஸாரிடம் கேட்டுள்ளது. (உ-3)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000-03-26 ஆந் திகதி பச்சிலைப்பள்ளி இடப்பெயர்வு ஏற்பட்ட போது, யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதிகளில் ஒருவராக எமது பிரிவின் கிளாலிப் பகுதிக்கு வருகை தந்து பளைப் பகுதி மக்களுக்குப் பல்வேறு விதமான உதவிகளைச் செய்தவரும், இடப்பெயர்வின் பின்னர் பருத்தித் துறையில் ஆரம்பிக்கப்பட்ட எமது தும்புத் தொழில் பயிற்சி நிலைய மாணவர்களுக்குத் தளபாட வசதிகளை மனமுவந்து அளித்த வருமாகிய யாழ். மாவட்டச் செயலகத்தின **RRAN** பொறியியலாளர்.

**உயர்திரு. பத்மநாதன் கிரிதரன்**

**அவர்களை நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

*பளைப்பகுதி மக்களும்,*
*தும்புப் பயிற்சி நிலைய மாணவர்களும்*
*பளை.*

(88965)

# அமெ.பணயக் கைதிகளின் சிரச்சேதம் நிறுத்தி வைப்பு

## 'அபுசெயுப்'தீவிரவாதிகள் அறிவிப்பு

மணிலா,ஜுன்12

தம்மிடம் பணயக் கைதிகளாக உள்ள மூன்று அமெரிக்கர்களை சிரச் சேதம் செய்யும் தமது முடிவை பிலிப்பைன்ஸின் 'அபுசெயுப்' தீவிர வாதிகள் பின் போட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தியவர்களை விடுவிப்பது தொடர்பான பேச்சுக்களை இரண்டு மலேசியர்கள் கலந்துகொள்ள அரசு இணக்கம் தெரிவித்ததை அடுத்து தீவிரவாதிகளால் இந்த முடிவு எடுக் கப்பட்டதாக 'அபுசெயுப்' அமைப்பை மேற்கோள் காட்டி மணிலா செய்தி கள் தெரிவித்தன.

தம்மிடம் பணயக்கைதிகளாக உள்ள 50 பேரில் கிறிஸ்தவ மிஷ னரியைச் சேர்ந்த இருவர் உட்பட மூவரை நேற்று சிரச் சேதம் செய் யப்போவதாக 'அபுசெயுப்' தீவிரவா திகள் முன்னதாக அறிவித்திருந்த னர்.முதலில் தீவிரவாதிகளின் கோரிக கையை நிராகரித்த பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அரோயா இறுதி நேரத்தில் அதனை ஏற்றுக்கொண் டார். (ம)

### ரஷ்ய விமானங்கள் நடுவானில் மோதின!

ரஷ்ய விமானப் படைக்குச் சொந தமான இரண்டு ஜெட் விமானங்கள் நேருக்கு நேர் மோதி வெடித்துச் சிதறியுள்ளன.

விமானங்கள் இரண்டும் மோதிக் கொள்வதற்கு முன்னர் இரு விமானங் களின் விமானிகளும் வெளியே குதித து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

லெவஷோவா இராணுவ விமானத் தளத்தில் இருந்து புறப்பட்ட சாகசக் காட்சிகளில் ஈடுபட்ட இரு ஜெல் - 39 ரக விமானங்களே விபத்துக்கு உள்ளாகின.

விமானங்களில் இருந்து குதித்த இரு விமானிகளில் ஒருவர் பாது காப்பாக மீட்கப்பட்டுள்ளார். மற்றொ ருவரைத் தேடும் பணி இடம்பெற்று வருகின்றது. (ம-9)



தேர்தலில் அமோக வெற்றியீட்டிய பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் தனது மனைவி மற்றும் நான்கு குழந்தைகளுடனும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதைப் படத்தில் காணலாம்.

### மக் வேயின் இறுதி நிமிடங்கள்...

இந்தியானா,ஜுன்12

மக் வே இறப்பதற்கு முன்பே அதற்கான ஆயத்தங்களைச் செய்தி ருந்தார். குண்டு வெடிப்புச் சம்பவத் தில் பாதிக்கப்பட்டோரிடம் மன்னிப் புக் கோரினார். "நான் இறந்து நரகத் துக்குச் சென்றால் அங்கு எனக்கு நல்ல நண்பர்கள் இருப்பார்கள்" என்று அவர் கூறினார்.

மக் வேக்கு கடைசி உணவாக இரண்டு பைந் பாலும் சொக்லேட் ஐஸ்கிறீமும் வழங்கப்பட்டது.

மரணதண்டனை நிறைவேற்றப்பட முன்னர் ஒவ்வொரு மணித்தியாலத் திற்கும் ஒரு முறை பத்திரிகையாளர் கூட்டம் நடத்தப்பட்டது. அவற்றில் சிறைச்சாலைத் திணைக்களப் பேச்சா ளர் டேவ டோனே மரண தண்டனை பற்றி விளக்கினார். மக் வேயின் அப் போதைய நிலை குறித்தும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

மக் வேயின் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது குறித்து கருத் துத் தெரிவித்த ஒக்லஹோமா குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் சிலர் -


"மக் வே செய்தது குற்றம்தான் அதற்காக அவனை கொல்வதை ஆதரிக்க முடியாது. இது பழிவாங் கும் செயலைப் போல் உள்ளது" என்று கருத்துத் தெரிவித்தனர். (ம)

### ரீ.வி. பார்த்தவாறே உயிர் பிரிந்தது

விசேடமாக வடிவமைக்கப்பட்ட கட்டிலில் சாய்ந்தவாறு தொலைக் காட்சி பார்த்துக்கொண்டிருக்க விஷ ஊசி செலுத்தப்பட்டு மக் வேயின் உயிர் பிரிக்கப்பட்டது.

மக் வேக்கு முதலில் சோடியம் பெனடொல், பவிலோன் ஆகிய மருந்துகள் ஊசி மூலம் ஏற்றப்பட்டன. இதன் மூலம் அவனது நரம்புகள், தசைகள் ஆகியன செயலிழக்கச் செய்யப்பட்டன. பின்னர் பொற்றாசியம் குளோரைட் மருந்து ஊசி மூலம் செலுத்தப்பட்டு அவனது இதயத் துடிப்பு நிறுத்தப்பட்டது.

மக் வேயின் உயிர் அடங்கிய சமயம் அந்தச் சிறைச்சாலையில் இனம்புரியாத ஆழ்ந்த அமைதி நில வியதாக செய்தியாளர்கள் தெரிவித் தனர். (ம)



உலகிலேயே மிக அதிக உயர முடைய தங்கும் விடுதியான "பேர்ஜ் அல் அரப்" துபாயில் அமைந்துள்ளது. எமிரேட்ஸ் விமான சேவை "ஸ்கை வோர்ட்ஸ்" என்ற பெயரில் ஆரம்பித்த விமானப் பயணிகளுக்கு சலுகை வழங் கும் திட்டத்தின் முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டி இது தொடர்பான பாராட்டு விளம்பரம் ஒன்று "பேர்ஜ் அல் அரப்" விடுதியின் முன்புறம் தொங்க விடப்பட்டிருப்பதைப் படத்தில் காண லாம்.

## ஒக்லஹோமா குண்டு வெடிப்புச் சூத்திரதாரி

# மக் வேக்கு நேற்று மரண தண்டனை!


# விஷ ஊசிகள் மூலம் சாகடிக்கப்பட்டார்

வாஷிங்ரன்,ஜுன்12

**1995 ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஒக்லஹோமா நகரில் இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரியான திமோதி மக் வேயின் மரண தண்டனை நேற்று பெரும் பரபரப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது.**

**1963 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்க அரசால் நிறைவேற்றப்பட்ட முதலாவது மரணதண்டனை இதுவாகும்.**

இன்டியானா மாநிலத்தில் உள்ள சிறை ஒன்றில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மரணப் படுக்கையில் வைத்து மக் வேக்கு உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 7 மணிக்கு விஷ ஊசி செலுத்தப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஒக்லஹோமா குண்டு வெடிப்பில் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பி யவர்களில் சிலரும், குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களும் மரண தண்டனை நிறை வேற்றுவதை நேரில் பார்த்துக்கொண்டிருந் தனர்.



மக் வேயும் மரணப்படுக்கையும்

மரணதண்டனை நிறைவேறிய காட்சி ஒக்லஹோமா நகரத் தொலைக்காட்சி மூல மும் ஒளிபரப்பப்பட் டது.

மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட சமயம் அதனை எதிர பவர்கள் சிறைச்சாலைக்கு வெளியே திரண்டு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். 'கொல்வதை நிறுத்துங்கள் அதற்காக இன்னொரு கொலை செய்யவேண்டாம்' என எழுதப்பட்ட பதாதைகளை அவர்கள் வைத்திருந்தனர்.

முன்னாள் இராணுவ வீரனான மக் வே ஆறு ஆண்டுகளுக்கு முன்பு திட்டமிட்டு நடத்திய இந்தக் குண்டுத் தாக்குதலில் 19 குழந்தைகள் உட்பட 168 பேர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க அரசு மீது இருந்த வெறுப்புக் காரணமா கவே தான் இந்தக் குண்டுத் தாக்குதலை நிகழ்த்திய தாக மக் வே தெரிவித்திருந்தான்.

இவனது மரண தண்டனை கடந்த மே மாதம் 16 ஆம் திகதி நிறைவேற்றப் பட இருந்தது; எனி னும் இறுதி நேரத்தில் அது இம் மாதம் 11 ஆம் திகதிக்கு பிற் போடப்பட்டது.

மக் வேயின் மரண தண்டனை நிறை வேற்றப்பட்டதை மனித உரிமைக் குழுக்களும் மரண தண்டனையை எதிப் பவர்களும் கடுமை யாக விமர்சித்துள்ள னர். இது ஒரு காட்டு மிராண்டித்தனமான செயல் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆனால் அமெரிக்காவின் 72 சதவீதமான மக்கள் மக் வேயின் மரண தண்டனை நிச்சயம் நிறைவேற் றப்பட வேண்டும் என்றே விரும்பியதாக கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்திருந்தன. (ம)

### டெக்ஸாஸ் மாநிலத்தில் வெள்ளப் பெருக்கு

வாஷிங்ரன்,ஜுன்12

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.



டெக்ஸாஸ் மாநிலத்தில் வெள்ளம் சூழ்ந்த பகுதியில் உதவியை எதிர் பார்த்து தமது கார்களின் மேல் தொற் றிக்கொண்டிருப்பவர்களை படத்தில் காணலாம்.

மாநிலத்தில் உள்ள 28 மாவட் டங்கள் வெள்ளப் பெருக்கால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ள னர்; ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென றுள்ளனர். வெள்ளம் பாதித்த 28 மாவட்டங்களையும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார். அந்த மாவட்டங்களுக்கு அவசர உத விகளை வழங்கவும் உத்தரவிடப் பட்டுள்ளது.

தற்போது வெள்ளம் வடிந்து வருவதாகப் பிந்திய செய்திகள் தெரிவித்தன.

வெள்ளப்பெருக்குக் காரணமாக ஹோஸ்ரனில் 100 கோடி டொலர் பெறுமதியான சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக நகர முதல்வர் தெரிவித்தார்.

உலக அரங்கில்

ஆறுகளில் இருந்து வெள்ளத் தால் அடித்து வரப்பட்ட முதலை கள் ஆபத்தான நகருக்குள் புகுந் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. முதலை பிடிப்பவர்கள் அவற்றைப் பிடிப்பதில் தீவிரம் காட்டி வருகின் றனர். அவற்றை மீண்டும் அவற்றின் இடத்தில் கொண்டு சென்று விடுவ தற்கான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப் பட்டது. (ம-7-9)

## நேபாள மன்னர் குடும்பப் படுகொலை

# விசாரணைக் குழுவுக்கு மேலும் நான்கு நாள்கள் அவகாசம்

காத்மண்டு,ஜுன்12

நேபாள மன்னர் குடும்பம் கூண் டோடு அழிக்கப்பட்ட அரண்மனைப் படுகொலைகள் குறித்து விசாரிப் பதற்கு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு தனது விசாரணைகளை மேற் கொள்வதற்கு மேலும் 4 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக் குழு தனது விசாரணைகளை மூன்று நாள்க ளுக்குள் முடித்து அறிக்கை சமர்ப் பிக்கும் என்று முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது. நேற்று முன்தினம் இந்தக் காலக்கெடு முடிவடைந்த போதும் குழு தனது விசாரணை களைப் பூர்த்தி செய்யவில்லை. இதனை அடுத்து விசாரணைக் குழுவின் கால எல்லையை மன்னர் மேலும் 4 நாள்களுக்கு அதிகரித்துள்ளார்.

இதேவேளை -

தற்போதைய ராணியான கோமல ராஜலஷ்மிதேவி ஷாவை விசா ரணை செய்வதற்கு இந்தக் குழு வுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நேபாள மன்னர் பரம்பரை வரலாற்றி லேயே விசாரணைக் குழு ஒன்றால் நேபாள ராணி ஒருவர் விசாரிக்கப் பட்டது இதுவே முதற்தடவை. (ம-9)

### இராணுவ ஆட்சியாளர் முஷாரப்புக்கு முழு அதிகாரம்

இஸ்லாமபாத்,ஜுன்12

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சு நடத்த இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்புக்கு பாகிஸ்தா னிய இராணுவத் தளபதிகள் முழு அதிகாரம் அளித்துள்ளனர்.

கடந்த சனியன்று இடம்பெற்ற படைத் தளபதிகளின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இஸ்ல மாபாத்திலிருந்து கிடைத்த செய்தி கள் தெரிவித்தன. (ஒ)

# நேபாள மன்னர் பிரேந்திரா பேசிய இறுதி வார்த்தை "நீ செய்ததென்ன?"

## லண்டன் 'ரைம்ஸ்' தகவல்

காத்மண்டு,ஜுன்12

"நீ செய்ததென்ன?" - இதுவே நேபாள முன்னாள் மன்னர் பிரேந்திரா இறுதியாகப் பேசியவார்த்தை என்று லண்டன் 'ரைம்ஸ்' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இளவரசர் திபேந்திரா முதலில் தனது தாயார் ஐஸ்வர்யாவைச் சுட்ட தாகவும் - அதனைக் கண்ட மன்னர் அதிர்ச்சியுடன் "நீ செய்ததென்ன?" என்று தனது மகனிடம் கேட்டதாகவும் -

மன்னர் கேட்டு கொண்டிருக்கும் போதே இளவரசர் அவர் மீது துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் -

ராணி ஐஸ்வர்யாவின் சகோதரனான ரவி சாம்சூர் ரணா தெரிவித்ததாக 'ரைம்ஸ்' சஞ்சிகை மேலும் கூறி உள்ளது.

கடந்த முதலாம் திகதி இரவு 7.45 மணிக்கு நாராயண் ஹைட்டி அரண்மனையில் இரவு உணவு ஆரம்பமானது. அப்போது அங்கிருந்த இளவரசர் திபேந்திரா மதுபானம் அருந்திவிட்டுத் தனது அறைக்குச் சென்று மீண்டும் 8.28 மணிக்கு சாப்பாட்டு இடத்துக்கு வந்துள்ளார் அதன் பின்னரே இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளன என்றும் 'ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

இதேவேளை -

மன்னர் குடும்பத்தைப் படு கொலை செய்ததாகக் கூறப்படும் இளவரசர் திபேந்திரா தன்னைத் தானே சுட்டுக் கொண்டதை நேரில் கண்ட சாட்சிகள் எவரும் இல்லை என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. தோட்டத்தில் கேட்ட வேட்டொலி இளவரசர் தன்னைத் தானே சுட்டுக் கொண்ட போது ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது. (ம)

யுத்த அனர்த்தம் காரணமாக

# பாஷையூர் தேவாலயங்களுக்கு ஏற்பட்ட சேதத்தால் 97 லட்சம் இழப்பு

## பங்குத் தந்தை தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாஷையூர்ப் பகுதியிலுள்ள மூன்று கத்தோலிக்கத் தேவாலயங்களுக்கும் ஏற்பட்ட சேதங்களால் 97 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக பங்குத் தந்தை அறிவித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு குடாநாட்டு மக்கள் இடம்பெயர்ந்ததில் இருந்து இன்று வரை நடைபெற்றுவரும் யுத்தத்தில் பாஷையூர் கரையோரப்பகுதியில் அமைந்துள்ள அந்தோனியார் தேவாலயமே அதிக இழப்புகளைச் சந்தித்துள்ளது.

பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு மட்டும் 78 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தவிர கொழும்புத்துறை செபமாலை மாதா தேவாலயத்துக்கு 11 லட்சம் ரூபாவும், வளன்புரம் புனித சூசையப்பர் தேவாலயத்துக்கு 8 லட்சம் ரூபாவும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சேதங்களை மீள புனரமைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் மீண்டும் ஏற்பட்ட யுத்தத்தால் இந்த அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகப் பங்குத்தந்தை கவலை தெரிவித்தார்.

தற்போது மீண்டும் தேவாலயங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

(க–6)

# 10 ஆயிரம் போத்தல்களில் கள்; அனலைதீவில் வேலை மும்முரம்

ஊர்காவற்றுறை, ஜூன் 12

அனலைதீவு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையில் இவ்வாண்டு 10 ஆயிரம் போத்தல்களில் கள் அடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்பொழுது பனங்கள் 'சீசன்' ஆரம்பித்துள்ளதை அடுத்து தினமும் 200 முதல் 300வரையினாலான போத்தல்கள் அடைக்கும் பணிகள் நடைபெற்றுவருவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பனங்கள் தட்டுப்பாடான காலங்களில் இப் பிரதேசத்தில் போத்தல் கள்ளுக்கு பெரும் கிராக்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தோடு செயற்பட்டு வந்த இச் சங்கம் தற்பொழுது தனியான ஒரு சங்கமாக இயங்கத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ம-16)

விணைத்திறமை காண் பரீட்சை:

# வர்த்தமானி அறிவித்தலால் சமுர்த்தி ஊழியர் குழப்பம்

வலி. வடக்கு, ஜூன் 12

யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அடுத்த மாதம் நடைபெறவுள்ள விணைத்திறமை காண் பரீட்சைக்குத் தோற்ற முடியுமா என்ற சந்தேகம் தோன்றியுள்ளது?

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக மூன்று வருட சேவை பூர்த்தி செய்தவர்களே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் சம்பந்தப்பட்டவர்கள் குழப்பிப் போய் உள்ளனர்.

யாழ். மாவட்ட சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி ஒன்றரை வருடங்களே ஆகின்றன. இந்நிலைமையில் இவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதனால் சமுர்த்தி அலுவலர்கள் தடுமாற்றம் அடைந்துள்ளனர்.

இதேவேளை—

நியமனக் கடிதங்கள் இதுவரை கிடைக்கப் பெறாதவர்களும் கூட இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. [க–86]


# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்

15

10

—

1936



சாயியின் அடியில்

03

06

—

1991

## அமரர் கந்தையா தியாகராஜா

(ஓய்வுபெற்ற M. L. T)

திதி: ஷஷ்டி (12 - 06 - 01)

பாசத்தால் எமை வளர்த்து ஆளாக்கிய
அன்புத் தந்தையே!
நாம் ஆளாகி நின்றபோது பார்ப்பதற்கு
நீங்கள் இல்லை!
பத்தாண்டுகள் என்ன பத்து யுகங்கள்தான்
சென்றாலும்
எங்கள் இதயத்தில் என்றும் வீற்றிருப்பீர்கள்!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முதலாம் கட்டை,
உடுவில்.

(88931)


# கைதடியில் மருந்தகம்

கோப்பாய், ஜூன் 12

கைதடி மத்திய மருந்தகம் கடந்தமுதலாம்திகதிதொடக்கம் கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தில் இயங்கி வருகிறது.

மத்திய மருந்தகப் பொறுப்பாளராக டாக்டர் பி. சண்முகரெட்ணம் கடமையாற்றி வருகிறார். (க–5-72)

# குளத்தில் கிடந்த வெறுமையான சூட்கேசுகள்!

தென்மராட்சி, ஜூன் 12

வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளையில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 'சூட்கேசு'களை திருடிச் சென்ற சம்பவம் கடந்த வாரம் துன்னாலை வடக்கு கொடிக்காடு வீட்டுத்திட்டத்தில் இடம்பெற்றது.

திருடர்கள் முக்கிய சில பொருள்கள் மற்றும் உடைகளை எடுத்துக்கொண்டு வெறும் சூட்கேசுகளை அப்பகுதியில் உள்ள குளத்தினுள் வீசிவிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பளைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து இந்த வீட்டுத்திட்டத்தில் தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் உடைமைகளே திருடப்பட்டுள்ளன.

(க–117)

# கால்நடைகளால் விவசாயச் செய்கை பாதிப்பு

கோப்பாய், ஜூன் 12

கோப்பாய் தரவைப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் விவசாயச் செய்கை கால்நடைகளினால் அழிக்கப்படுவதாக இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிகளில் கால்நடைகளை அவிழ்த்து விடவேண்டாம் என்று கால்நடை வளர்ப்பாளர்களுக்கு அறிவித்துள்ள போதிலும் அவர்கள் கவனயீனமாக இருப்பதாகப் புகார் கூறப்படுகிறது.

(க–5-72)

# ஆதன நிலுவையை செலுத்துமாறு அறிவுறுத்தல்

சண்டிலிப்பாய், ஜூன் 12

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம் தமது பகுதியிலுள்ளவர்களுக்கு ஆதன நிலுவையைச் செலுத்துமாறு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இந்த நிலுவையில் இடம்பெயர்ந்த காலப்பகுதி தவிர்க்கப்பட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க–135)

# யாழ். நகரிலுள்ள சில கடைகள் சனியன்று முழு நேரமும் திறப்பு

## இதனால் தொழிலாளர் பெரிதும் சிரமம்

யாழ்ப்பாணம் ஜூன் 12

சனிக்கிழமைகளில் பகல் இரண்டு மணியுடன் வர்த்தக நிலையங்களை மூடி, தொழிலாளர்களுக்கு லீவு வழங்கப்பட வேண்டும் என யாழ்ப்பாணம் வர்த்தகர் சங்கத்தினர் அறிவித்திருந்தும் கூட, யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள சில வர்த்தக நிறுவனங்கள் அதனைக் கடைப்பிடிப்பதில்லை என வர்த்தக நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் முறையிட்டுள்ளார்கள்.

சனிக்கிழமைகளில் சில வர்த்தக நிலையங்கள் பிற்பகல் ஆறு மணி வரை திறந்து வியாபாரம் நடைபெற்று வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதனால் தாம் தூர இடங்களில் உள்ள தமது வீடுகளுக்குச் செல்வதில் பெரும் சிரமம் அடைவதாகவும் —

வர்த்தக சங்கத்தினர் சனிக்கிழமைகள் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னரும் திறந்திருந்து வியாபாரம் செய்யும் நிறுவனங்களைக் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க–152)

# கால்நடை வைத்தியபணிமனை மல்லாகத்தில் இயங்குகிறது

வலிகாமம் தெற்கு, ஜூன் 12

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் பணிமனை தற்போது மல்லாகத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் உள்ள கட்டடத்தில் இயங்கத் தொடங்கி உள்ளது.

இதுவரை காலமும் இந்த அலுவலகம் சுன்னாகம் பெற்றோல் நிலையத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் இயங்கி வந்தது.

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கென தனியான கால்நடை வைத்தியர் அலுவலகம் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த அலுவலகம் மல்லாகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

ஏற்கனவே தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் அலுவலகம் இயங்கிவந்த சுன்னாகத்தில் உள்ள கட்டடத்தில் தற்போது வலிகாமம் தெற்குக்கான கால்நடை வைத்தியர் அலுவலகம் இயங்கி வருகின்றது.

இந்த இரண்டு அலுவலகங்களிலும் கால்நடை வைத்தியராக டாக்டர் பொ. மகாதேவன் செயற்பட்டு வருகின்றார்.

(க-152)

# சண்டிலிப்பாய் விவசாயிகளுக்கு தனியான கமசேவை நிலையம்

## பொருத்தமான காணியைப்பெற முயற்சி

சண்டிலிப்பாய் ஜூன் 12

சண்டிலிப்பாய் (வலி. தென்மேற்கு) பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவசாயிகள் நலன் கருதித் தனியானதொரு கமநலச் சேவை கேந்திர நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிலையத்தை நிறுவுவதற்கு இப் பிரிவில்பொருத்தமான காணி ஒன்றைப் பெறுவதற்கான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பணிமனையில் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த விவசாய சம்மேளனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

புதிய கமநலசேவை கேந்திர நிலையத்தை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதற்குத் தற்போது வசதி ஏற்பட்டிருக்கின்ற போதிலும் இதனைப் பொருத்தமான இடத்தில் நிறுவுவதற்குத் தேவையான காணி ஒன்றைப் பெற முடியாது இருப்பதாகவும் பிரதேச செயலர் தமது தலைமை உரையில் தெரிவித்தார்.

விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். இதனை அடுத்து இப் பிரதேச செயலகப் பிரிவில் சகல இடங்களிலுள்ள விவசாயிகளுக்கும் ஏற்றதொரு மத்தியமான இடத்தில் — வசதியான இடத்தில் கமநல கேந்திர நிலையத்தை அமைப்பதற்குத் தேவையான காணி ஒன்றைப் பெறுவதற்கு முயற்சி மேற்கொள்வதற்காகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனத்தின் தலைவரும், வலி. தென்மேற்குக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான ச. செல்வரத்தினம் தலைமையில் இந்த நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டது.

இதனை அடுத்து இக் குழு இதற்கான காணியை மத்தியமான இடமான சண்டிலிப்பாய்ப் பகுதியில் பெறுவதற்கு உடனடி முயற்சி மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க-135)

# வித்வ சபைக்கு மேலும் 3 உறுப்பினர் தெரிவாகினர்

யாழ்ப்பாணம், ஜூன் 12

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் வித்வ சபை உறுப்பினர்களாக மேலும் மூன்று குருமார்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

சுன்னாகம்-மயிலணி சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக்குருக்கள், மாவிட்டபுரம் சிவஸ்ரீ எஸ். சுந்தரமூர்த்திக்குருக்கள், சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோரே புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களாவர்.

ஏற்கனவே யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர், கோப்பாய் சிவஸ்ரீ ச. பரமசாமிக்குருக்கள், சாவகச்சேரி சிவஸ்ரீ ச. சிதம்பரநாதக் குருக்கள்ஆகியோர்வித்வசபை உறுப்பினர்களாக விளங்கி வருகின்றனர்.

நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் விசேட பொதுக்கூட்டத்திலேயே புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

(க-152)

உதயன்

## சிறந்த மார்க்கம் ஒன்று உண்டு....!

இனக்கலவரங்கள் உண்டாகும் பட்சத்தில், அவற்றை அடக்குவதற்கென மூன்று இனங்களையும் சேர்ந்த விசேட பொலீஸ் பிரிவு ஒன்றை உருவாக்குவது குறித்து அரசதரப்பில் ஆராயப்பட்டு வருவதாக ஒரு செய்தி!

இன அலுவல்கள் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அத்தாவுட செனிவிரத்னா, பொலீஸ் உயர் அதிகாரிகளுடன் இதுகுறித்து ஆலோசனையும் நடத்தியிருக்கிறார்.

அண்மையில் மாவனெல்லவில் இடம்பெற்ற சிங்களவர் - முஸ்லிம்கள் கலவரத்தின்போது பொலீஸார் நடந்துகொண்ட விதம் குறித்துப் பல தரப்புகளில் இருந்தும் கண்டனங்கள் எழுந்தன. முஸ்லிம்களின் உடைமைகள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குண்டர்களால் நாசமாக்கப்பட்டபோதும், முஸ்லிம்கள் தாக்கப்பட்டபோதும், அவற்றைத் தடுப்பதற்கு பொலீஸார் நடவடிக்கை எடுக்காது பார்த்துக்கொண்டு நின்றார்கள் என்பது பிரதான குற்றச்சாட்டு. பொலீஸாரின் இந்தப் பார்த்திருக்கும் செயற்பாடு, பெரும்பான்மை இனக் குண்டர்களை மேலும் வன்செயல்களில் ஈடுபடத் தூண்டியிருக்கும் என்பது நிச்சயம்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பெரும் பொறுப்புடையவர்கள் பொலீஸார். அதுவே அவர்களின் பிரதான கடமையாகும். நாட்டின் பிரசைகள் எல்லோருக்கும், பாகுபாடு எதுவுமின்றிப் பாதுகாப்புத் தரவேண்டிய பொறுப்பும் பொலீஸாருடையதே.

ஆனால், இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சியாளரிடமிருந்து இந்த நாடு சுதந்திரம் அடைந்ததின் பின்னர், ஜனநாயக நாடுகளின் பொலீஸாருககு இருக்க வேண்டிய வரன்முறை, நியதி - நியமம் - தலைகீழாக மாறிவிட்டமை பழைய சங்கதி!

பொலீஸ்படை மற்றும் ஆயுதப் படைகளில் நாட்டின் சகல இனங்களையும் சேர்ந்தவர்கள் பணிபுரிந்து, இன, சாதி, சமயப் பாகுபாடு எதுவுமின்றி எல்லோரும் இலங்கையின் மக்களே என்று நடுவு நிலைமையுடனும் நியாயம் நீதியுடனும் சேவையாற்றியமை "வரலாறு" ஆகிவிட்டது!

இப்போது ஆயுதப் படைகளில் தமிழர்கள், முஸ்லிம்கள் - சிறுபானமை இனத்தவர்கள் - கஞ்சிக்குப பயறு போட்ட நிலையிலும் இல்லை! அவற்றில் பணிபுரிந்தவர்களில் மிக அநேகர் இனத்துவேஷம் மிக்கவர்கள். சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு குறிப்பாகத் தமிழர்களை இம்சிப்பதிலும், சித்திரவதை செய்வதிலும் "சாதனைகள்" நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய ஒரு பின்னணியில், மூன்று இனங்களையும் சேர்ந்த அதிகாரிகளும் பொலீஸாரும் கொணட இனக்கலவரம் அடக்கும் விசேட பொலீஸ் பிரிவு அமைக்கும் அமைச்சரின் ஆலோசனை காலத்துக்கு உகந்ததே. ஆனால் மூன்று இனங்களையும் சேர்ந்த அதிகாரிகள், ஏனையோர் சம எண்ணிக்கையில் அமைவது கட்டாயம். பெயருக்கு தமிழ், முஸ்லிம் அதிகாரிகள், ஊழியர்களை நியமிப்பமிப்பதால் இப்போதுள்ள நிலைமையில் எள்ளளவும் மாற்றம் உண்டாகமாட்டாது.

அற்புதமான ஆலோசனை, புதிய திட்டம் என்று கூறிக்கொண்டு இந்த விசேட பிரிவுக்கும் இன விகிதாசாரத்தில் பணியாளர்கள் நியமிக்கப்படின் ஆகப்போவது எதுவுமில்லை. சம எண்ணிக்கையில் அதிகாரிகள், பணியாளர்கள் நியமிக்கப்பட்டாலும்கூட, அந்தப்பிரிவுக்குச் சேர்க்கப்படுவோர் இனத்துவேசம் அற்றவர்கள் என்பது நூற்றுக்கு நூறுவீதம் உறுதி செய்யப்பட வேண்டும்.

1983 இனக்கலவரத்தினால் உலகத்தில் அவப்பெயர் கேட்டது இலங்கை - அதன் பெரும்பான்மைஇன மக்கள். ஆகையால் மீண்டும் அதனைச் சம்பாதிக்க இன்றைய அரசு விரும்பாமை இயல்பே. மாவனெல்லைக் கலவரம் போன்று வேறு இடங்களுக்கும் பரவினால் முஸ்லிம் நாடுகளின் நட்புறவு குன்றி, அவற்றிடமிருந்து கிடைக்கும் நிதி "அரோகரா" ஆகிவிடும் என்ற கவலை இன்னொருபுறம்.

எதுவானாலும் -

நாட்டின் எல்லா மக்களுக்கும் - பெரும்பான்மை சிறுபான்மையென்று வேறுபாடுகாட்டாமல் - சம அந்தஸ்தும், சம உரிமைகளும் வழங்க வேண்டும். அவற்றைத் தளர்வின்றி நடைமுறைப்படுத்த வேண்டும். இனக்கலவரங்களைத் தடுப்பதற்கு அதனைவிடச் சிறந்த மார்க்கம் வேறில்லை!

# குழாய் நீர் விநியோகம் அத்தியாவசிய சேவை!

## அரசாங்கம் திடீரெனப் பிரகடனம்

கொழும்பு,ஜுன்12

குழாய் நீர்விநியோகம் அரசாங்கத்தினால் அத்தியாயவசிய சேவையாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் இந்தப் பிரகடனம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைத் தலைவர் எம்.எல்.ஏ.எம்.ஹஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரப்பகுதிக்கான நீர்விநியோகத்தைச் சீர்குலைப்பதற்கு சில தீயசக்திகள் முனைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் -

கொழும்பு மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் கொழும்புப் பகுதிக்கான குழாய் நீர்விநியோகம் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் பொறுப்பேற்கப்படும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

## நாட்டு நடப்பு

'பகிடி வதை' - II

"போடடா! தோப்புக்கரணம் நூறு
போதுமினி போத்திலைப் போடு
பாடடா! நீ தூ சணத்தில்
பக்தியாய் பாடல் ஒன்று
ஓடடா! ஓடிச் சென்று
ஒருத்தி முன் விழுந்தெழும்பு"
நாடடா! இது தமிழர் நாடு!
நடத்துவாயோ பகிடிவதை இங்கு?

- விகடகவி -

## கஷ்டங்களின் மத்தியில் வாழும் யாழ்.மக்கள்

# போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்தால் வீதி விபத்துக்களைத் தடுக்க முடியும்

## சாரதிகளுக்கான கலந்துரையாடலில் யாழ்.பொலீஸ் அதிகாரி

யாழ்ப்பாணம்,ஜுன்12

போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்காமையினால்தான் யாழ்ப்பாணத்தில் வாகன விபத்துக்கள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. போக்குவரத்து விதிகளை அனைவரும் கடைப்பிடித்தால் விபத்துக்களைத் தடுக்க முடியும். இவ்வாறு யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.ஐ.கொள்ளுரே தெரிவித்தார்.

கொக்குவில் மக்கள் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சாரதிகளுக்கான போக்குவரத்து விதிகள்' தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

மக்கள் நலன்புரிச்சங்க உதவி மாவட்ட ஆணையாளர் கே.துஷ்யந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் கூறியதாவது:-

விபத்துக்களைத் தடுப்பதற்கும், குற்றச் செயல்களை வளரவிடாமல் தடுப்பதற்கும் பொதுமக்கள்தான் உதவவேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்களின் உயிர், உடைமைகளை பாதுகாப்பதற்கும், சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்குமே யாழ்ப்பாண பொலீஸ் நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது.

பொலீஸார் இங்கு பொதுமக்களுக்கு உதவி செய்வதற்காகவே கடமையாற்றுகின்றனர்.

1976,1979ஆம் ஆண்டுகளில் நான் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றியிருக்கின்றேன். அன்று இருந்த யாழ்ப்பாணத்துக்கும் இன்று இருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் வேறுபாடான நிலை இருப்பதனைக் காண முடிகிறது.

### அன்று மகிழ்ச்சியாகக் காணப்பட்ட யாழ்.மக்கள்

அப்பொழுது எங்கும் பூமரங்கள் வளர்க்கப்பட்டு எங்கும் பூஞ்சோலையாகக் காணப்பட்டன. மக்கள் மகிழ்ச்சியுடனும் சந்தோசத்துடனும் வாழ்ந்தனர். இன்று இங்குள்ள மக்கள் சோகத்துடனும் துன்பத்துடனும் வாழ்வது கண்டு வேதனைப்படுகின்றேன்.

சொல்லொணாக் கஷ்டத்திலும் துன்பத்திலும் யாழ்.மக்கள் வாழ்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் வசித்த தனவந்தர்கள், வசதிபடைத்தவர்கள் எல்லோரும் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டனர். நடுத்தர நிலையிலுள்ள மற்றும் கஷ்டப்பட்ட மக்களே இன்று யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றனர்.

கஷ்டத்தின் மத்தியிலும், துன்பத்தின் மத்தியிலும் வாழ்கின்ற இந்த மக்களுக்கு உதவிசெய்வது பொலீஸாரின் கடமையாகும்.

பொலீஸார் தமது கடமைகளைச் செய்வதற்கு பொதுமக்கள் உதவ வேண்டும். பொலீஸ் நிலையத்துக்கு பொதுமக்கள் எவ்வித பயமுமின்றி வந்து தமது முறைப்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

யாழ்.பொலீஸ் நிலைய குற்றப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி எஸ்.களுவாராய்ச்சி அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

நாட்டு நிலைமையினால் யாழ்ப்பாணத்தில் பலரும் கஷ்டநிலையில் வாழ்கிறார்கள். இவர்களில் பலர் மற்றவர்களுடைய பொருள்களைத் திருடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஒருவர் கஷ்டப்பட்டு உழைத்து தேடிய சொத்துக்களை இன்னொருவர் திருடுவது நல்லதல்ல.

வீடுகளில் பெறுமதியான பொருள்களும் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களும் திருடப்பட்டு வருகின்றன. வீடுகளில் பூட்டுக்களைப் போட்டுப் பாதுகாப்பான இடங்களில் பொருள்களை வைக்கவேண்டும். பலரின் கவனயீனத்தாலேயே வீடுகளில் பொருள்கள் சூறைபோகின்றன.

மோட்டார் சைக்கிள், சைக்கிள்களை எங்காவது நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் பூட்டி வைத்திருக்க வேண்டும். இரவில் நித்திரையில் இருக்கும்போது சிறு சத்தம் கேட்டால் கூட உடனே எழுந்து பார்க்க வேண்டும். நீங்கள் எவ்வளவு தூரத்துக்கு அவதானமாக இருக்கிறீர்களோ அவ்வளவுக்கு திருட்டுக்களை கட்டுப்படுத்தமுடியும்.

### தமிழில் முறைப்பாடு செய்ய முடியும்

திருட்டுக்கள் பற்றி எமது பொலீஸ் நிலையத்தில் நீங்கள் தமிழிலே முறைப்பாடு செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

திருட்டுப் பொருள்களைக் கண்டால் அல்லது திருட்டுச் சம்பவங்கள் பற்றி அறிந்தால் உடனே பொலீஸாருக்கு அறிவியுங்கள். அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

போக்குவரத்துப்பிரிவு பொலீஸ் பொறுப்பதிகாரி எஸ்.ஐ.உடுவலல உரையாற்றும்போது கூறியதாவது:-

யாழ்ப்பாணத்திலுள்ள சாரதிகள் தமது வாகனங்களுக்குரிய 'சிக்னல்' லைற்றைப் பாவிப்பதில்லை. தனியார் பஸ்கள் உட்பட பல வாகனங்களில் சிக்னல் லைற்றுக்களே இல்லை.

வாகனங்கள் அனைத்துக்கும் 'சிக்னல்' மற்றும் 'ஹெற் லைற்'றுக்கள் அவசியம் பூட்டப்பட்டிருக்க வேண்டும்.

வாகனங்களின் முன்னுக்கு இரண்டு லைற்றுகளும் பின்னுக்கு இரண்டு லைற்றுகளும் இருக்க வேண்டும். சந்திகளில் வாகனங்கள் நிறுத்தும்போது 50 மீற்றர் தூரத்திலே நிறுத்த வேண்டும். சந்திகளில் வாகனங்களைத் திருப்பும்போது பின்பக்கத்தைப் கவனித்துத் திருப்ப வேண்டும்.

பல வாகனங்களின் உரிமையாளர்கள் முற்றாகத் தேய்ந்துபோன ரயாகளையே பாவித்து வருகின்றனர். இதனால் 'பிறேக்' போடும் நேரங்களில் இந்த ரயர்கள் சறுக்கி விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே பழுதடைந்த சகல ரயர்களும் மாறறப்பட்ட பின்னரே வாகனத்தைப் பாவிக்க வேண்டும்.

### மிதி பலகையில் நின்று பயணம் செய்யாதீர்

மினிபஸ்ஸில் மிதிபலகையில் நின்று பலர் பயணம் செய்கிறார்கள். இவ்வாறு மிதிபலகையில் நின்று பயணம் செய்வதால் அந்த மினிபஸ்ஸின் சாரதி மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். எனவே மிதி பலகையில் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டாம்.

யாழ்.நகரப்பகுதியிலுள்ள பிரதான வீதிகளை மறைத்து வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. இதனால் போக்குவரத்துக்கு பெரும் சிரமம் ஏற்படுகின்றது. வாகனங்கள் அனைத்தும் முன் னுக்கும் பின்னுக்கும் தமது வாகன இலக்கததைத் தெளிவாக எழுதி வைத்திருக்க வேண்டும். என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இக்கருத்தரங்கில் சாரதிகளின் கேள்விகளுக்கும் போக்குவரத்துப் பிரிவு பொலீஸ் பொறுப்பதிகாரி விளக்கமளித்தார். (க-5)

# மின்கட்டணம் மேலும் 20 சதவீதம் உயரும்?

மின்சாரக் கட்டணத்தை மேலும் 20 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

சபையின் செயற்பாட்டுச் செலவுகளுக்காக வங்கிகளிடமிருந்து 800 கோடி ரூபாய் வரை கடன் பெறப்பட்டிருப்பதாகவும் -

அந்தக் கடனை மீளச் செலுத்துவதற்கு கட்டணத்தை அதிகரிப்பதைத்தவிர வேறு வழி இல்லை என்றும் -

மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் அனுமதி மறுத்தால் 800 கோடி ரூபாவை திறைசேரியின் மூலம் செலுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்க உள்ளதாகவும் -

கடந்த 4 மாதங்களுக்குள் அனல் மின்சார உற்பத்திக்காக 800 கோடி ரூபா செலவாகியுள்ளதாகவும், இதனாலேயே மேற்படி கடன் பெற வேண்டிய நிலை சபைக்கு ஏற்பட்டதாகவும் -

அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துவோரிடமிருந்து 25 வீத மேலதிகக் கட்டணம் அறவிடப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

### திருமறைக் கலாமன்றப் போட்டிகள

யாழ்.திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களுக்கு இடையிலான பொது அறிவு மற்றும்இலக்கியப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பெயர்களை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (க-6)

## நாளை

வைகாசி 30
புதன்கிழமை
திதி: ஸப்தமி
மாலை 6.02 வரை.
நட்சத்திரம்: சதயம்
பிற்பகல் 12.56 வரை.
சுபநேரம் : 4.22 - 5.52
ராகுகாலம் : 11.52 - 1.22
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உனக்கு அநீதி செய்யப்பட்டால் பொறுத்துக் கொள். நீ அதைச் செய்வதில்தான் துக்கம் ஏற்படும்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# புனரமைப்புக்கு ரூ.25 கோடி நிதி

கொழும்பு,ஜூன்12

வடக்கு - கிழக்கில் மேற்கொள் ளப்படவுள்ள புனரமைப்புப் பணிக ளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 25 கோடி ரூபாவை வழங்கவிருக் கின்றது.

இந்த நிதிமூலம் அந்தப் பகுதி யில் உள்ள வீதிகள், குளங்கள், கால்வாய்கள் புனரமைக்கப்படவிருப் பதாக அரசு அறிவித்துள்ளது. (3)


## கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம்

## ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் அமரர் ஆறுமுகம் - கமலநாதன் அவர்களது ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் அனுசரணையுடன் கே.சி.சி.சி. (K.C.C.C) விளையாட்டுக்கழகம் நடத்தும் 6 பேர் கொண்ட 5 பந்து பரிமாற்றங்கள் கொண்ட தோற்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டிக்கு யா/துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவுசெய்த அணிக ளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 14.06.2001 (வியாழன் 4.30 மணி)
அணி ஒழுங்கு தெரிவு:- 14.06.2001 (வியாழன் 5.00 மணி)
விண்ணப்பக் கட்டணம்: ரூபா 100/-

குறிப்பு: எதிர்வரும் (16.06.2001) சனிக்கிழமை அன்று போட்டிகள் ஆரம்பமாகும். ஒரு கழகத்தில் இருந்து ஆகக் கூடுதலாக 2 அணிகள் மட்டுமே பங்குபற்றலாம்.

நிர்வாகம்,
கே.சி.சி.சி.விளையாட்டுக் கழகம்,கொக்குவில். (88936)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## தமிழ் மன்றம்
நடத்தும்
**வித்துவான் க.சொக்கலிங்கம் எம்.ஏ.** அவர்கள்
(சொக்கன்) எழுதிய
## "இலக்கியக் கருவூலம்"
## நூல்வெளியீட்டு விழா

காலம்:- நாளை (13.06.2001) புதன்கிழமை பி.ப.2.30 மணி
இடம்:- யாழ்.பல்கலைக்கழக நூல் நிலையக் கேட்போர் கூடம்.
தலைவர்:- திரு.அ.பௌநந்தி
(தலைவர், தமிழ் மன்றம்)

ஆசியுரைகள்:-
மஹாராஜஸ்ரீ து.சண்முகநாதக்குருக்கள்,
பேராயர் சு.ஜெபநேசன்

வாழ்த்துரை:-
துணைவேந்தர், பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை

வெளியீட்டுரை:-
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
(ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

ஆய்வுரைகள்
பண்டிதர் செ.திருநாவுக்கரசு எம்.ஏ.
கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
அறிஞர், ஆர்வலர் அனைவரும் வருக.

அ.பௌநந்தி, தலைவர். | தமிழ் மன்றம் | ந.குகபரன் செயலாளர்.

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/17065)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 - 10 - 1912

உதிர்வு 24 - 05 - 2000

## திருமதி நல்லம்மா பொன்னுச்சாமி

திதி:- அபரபக்க ஷஷ்டி. 12.06.2001

எம்மைப் பெற்ற அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உங்களது நினைவு எமது நெஞ்சை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்திபெற பண்ணாகம் விசவத்தனை முருகனைத் தினமும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பண்ணாகம், சுழிபுரம். (88938)

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மாயமான சைக்கிள்

சுன்னாகம்,ஜூன்12

தனியார் சிகிச்சை நிலையம் ஒன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த சைக்கிள் ஓரிரு நிமிடங் களில் மாயமாக மறைந்துவிட்டது.

இச்சம்பவம் அண்மையில் உடு வில் அம்பலவாணர் வீதியில் இடம் பெற்றுள்ளது.

சிகிச்சை நிலையத்துக்கு முன் பாக வீதியோரத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே சென்றவர் திரும்பிவந்து பார்த்தபோதே சைக்கிள காணாமற்போய் இருந்தது. (க-27)

## சனசமூக நிலையத் தலைவர்களுக்கு அறிவுறுத்தல்

குருநகர்,ஜூன்12

புதிய ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டத்தை இதுவரை நடத் தாமல் உள்ள சனசமூக நிலையங் கள் உடனடியாக அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கான முன்னறிவித்தல் கடிதத்தை உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர், யாழ்.மாநகரசபை எல்லையினுள் இயங்கும் சனசமூக நிலையத் தலைவர்களைப் பணித் துள்ளார்.

அத்துடன் சனசமூக நிலைய யாப்பு, கடந்தகால வரவு-செலவு அறிக்கை, 2000ஆம் ஆண்டுவரை சந்தாப்பணம் செலுத்திய அங்கத் தவர் பட்டியல், நிலைய நிர்வாக வரைபடம் ஆகியவைகளையும் தமக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் மேலும் கோரியுள்ளார். (க-51)

## பம்பாய் வெங்காயச் செய்கைக்கு ஊக்குவிப்பு

வடமராட்சி,ஜூன்12

வடமராட்சி கிழக்கில் பம்பாய் வெங்காய உற்பத்தியை ஊக்குவிப் பதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சின்ன வெங்காயத்துக்கு யாழ். குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, விலை உயர்வை அடுத்து அப்பகுதி விவசாயிகளுக்கு பம்பாய் வெங்காய விதைகள் வழங்கி பம் பாய் வெங்காயச் செய்கையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

அம்பன், குடத்தனை ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகளுக்கு பம்பாய் வெங்காய விதைகள் வழங் கப்பட்டுள்ளன. சில வருடங்களுக்கு முன் வடமராட்சி கிழக்கு விவசாயி கள் பம்பாய் வெங்காய உற்பத்தியில் அதிக ஆர்வம்காட்டி பெரும் பயன டைந்தனர் என்பது குறிப்பிடத்தக் கது. (க-182)

## மருதங்கேணியில் எண்மருக்கு ரூ.5 ஆயிரம் நிதியுதவி

வடமராட்சி,ஜூன்12

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெற்றுவந்த எட்டுப்பேருக்கு சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவ தற்காக தலா 5 ஆயிரம் ரூபா வழங் கப்பட்டது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை தலைமையில் தும்பளை சிவப்பிர காச மகா வித்தியாலயத்தில் நடை பெற்ற இவ் வைபவத்தில் பருத்தித் துறை பிரதேச சபைத்தலைவர் ஐ.சிறீ ரங்கேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட் டவர்களுக்கு இந்த நிதியை வழங் கினார். (க-182)

## தங்கப்பதக்கம் வழங்கி மூவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்12

தேசிய இளைஞர் சேவை மன் றத்தில் 20 வருட சேவையைப் பூர்த்தி செய்த மூவருக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கி, அவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமைச் செயலகத் தினால் வருடா வருடம் நடத்தப் பட்டு வரும் இந்தக் கௌரவிப்பு நிகழ் வில் இவ்வருடம் இளைஞர் சேவை கள் மன்றத்தின் யாழ். கிளையில் 20 வருட சேவையைப் பூர்த்தி செய்த மூவருக்குமே இப்பதக்கங்கள் வழங் கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் சி.சிவதட்சணாமூர்த்தி, நிஸ்கோ மாவட்ட முகாமையாளர் செ.நாகேந் திரன், எழுதுவினைஞர் ப.பஞ்சலிங் கம் ஆகியோருக்கே இப் பதக்கங் கள் வழங்கப்பட்டுள்ளன. (க-4)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நம

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

12-06-2001

H A P P Y B I R T H D A Y



## செல்வி ஈஸ்வரன் ரிஷிகேசினி

யாழ்ப்பாணம், கொக்குவில் சம்பியன் ஒழுங்கை, மாத்தனை கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த ஈஸ்வரன் - ஸ்ரீவாணி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஈ.ரிஷிகேசினி முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் இன்று (12-06-2001) செவ்வாய்க்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

ரிஷிகேசினியை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மம்மா, பெரியப்பா ஸ்ரீகாந்தன் குடும்பம், ஸ்ரீவிக்னேஸ்வரன் மாமா குடும்பம் (சுவிஸ்), ஸ்ரீகாந்தன் மாமா குடும்பம் (டோகா), சண்முகம் குடும்பம் (கொலன்ட்), நாச்சிமார் கோயிலடி மாமா, மாமி, கஜன் அண்ணா, ஜ.இராசேந்திரம் குடும்பம், வீ.நடேச குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், யாவரும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

முகவரி:
ரிஷிகேசினி நகைத் தொழிலகம்,
சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

பாலசிங்கம் ஈஸ்வரன் (தகப்பன்) (88924)


## மாதகல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம்

மாதகல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற் சவம் 05-06-2001 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று (12-06-2001) செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு (புதிய நேரம்) நற்கருணை வழிபாடும் நாளை (13-06-2001) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு (புதிய நேரம்) திருநாள் திருப்பலியும் திருச்சுரூப பவனியும் இடம்பெறும்.

(88932) - பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.


## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடி 06 - 11 - 1957

காலன் பிடி 24 - 05 - 2000

## செல்வி சசிகலா சுப்பிரமணியம்

(முன்னாள் சிறாப்பர், பிரதேச செயலகம், சாவகச்சேரி)

சிரார்த்த திதி : வைகாசி தேய்பிறை சஷ்டி
(12-06-2001 செவ்வாய்க்கிழமை)

காலன் கவர்ந்து ஓராண்டு மறைந்ததம்மா!
எம் நெஞ்சகலா உம் நினைவு என்றும் மறையாது!
அருவமாகி நிற்கும் நினது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து ஆறுதலடைவோம்!

என்றும் நினைந்துருகும்:
அப்பா, அம்மா, சகோதர சகோதரியர், மைத்துனர், மைத்துனியர், குடும்பத்தினர்.

கிழுவானை ஒழுங்கை, கோப்பாய். (88913)

# சகதிக்குள் சிக்கும் யாழ்.சமூகம்; சீரழிவுகளுக்கு எப்போது முடிவு?

யாழ்ப்பாணம்! இனிய யாழ் ஓசை காதுகளில் பாய நெஞ்சினிலே இன்பங்களைச் சுமந்து மகிழ்ந்திருந்த தேசம் என்று கதிரவன் கண்முன் தோன்றி எம்மைத் துயிலெழுப்ப மறந்தாலும் வேட்டொலிகள் திருப்பள்ளிஎழுச்சி பாடித் தினமும் எம்மைத் துயிலெழுப்பும். முன்பெல்லாம் யாழ்ப்பாணத் தமிழனின் கலை கலாசாரங்களில் எத்தகைய பண்புகள் காணப்பட்டதோ அது இன்று இல்லை. இந்த யுத்த பூமியிலே தினம் தினம் எத்தனை மாற்றங்கள்?. இந்த மாற்றங்களில்தான் எத்தனை சீரழிவுகள்?

எமது தமிழ்ச் சமூகம் நீண்ட நல்ல எதிர்பார்ப்புகளோடு யாழ்ப்பாணத்தில் கல்விச் செல்வத்துக்கு உரமிட்டு நீர் பாய்ச்சி வானோங்க வளர அரும்பாடுபட்டது. அதனால் சிறப்புறு நிலைக்கு உயர்ந்துகொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தவரின் மூளை என வர்ணிக்கப்பட்ட 'யாழ். நூலக' எரிப்புக்குப் பின்னரும்கூட எம்மவர்களை அசைக்கமுடியாத நிலை இருந்தது.

ஆனால் இன்று யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை தலைகீழாக மாறியுள்ளது.

1985 முதல் 1995 வரையுள்ள காலப்பகுதியும் யுத்த அரக்கனின் வாய்க்குள் புதைந்துதான் இருந்தது. ஆனால் கலாசாரச் சீரழிவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுத்தான் இனவிடுதலைப் போர் நகர்ந்துகொண்டிருந்தது. "கல்வியே எங்களின் மூலதனம்" என்ற தாரக மந்திரம் அன்றைகால மக்களின் மனதுகளில் ஆளப் பொறிக்கப்பட்டிருந்தது. ஒருபுறம் போர்ச் சூழல்; மறுபுறம் கல்விச் செயற்பாடுகள். எத்தனையோ இன்னல்கள் யாழ்ப்பாணத்தவரின் கலைகளை முட்டி மோதின. அப்போதும் நிலைகுலையாது குப்பி விளக்கினில் குனிந்திருந்து படித்து புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தி எய்தியும் ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகளில் முறையே 8டி, 4ஏ களைப் பெற்று யாழ். மாணவர்கள் சகல வசதிகள் படைத்த மற்றைய பிரதேச மாணவர்கள் மத்தியிலும் அவர்களுக்குச் சரிநிகராகப் பெறுபேறுகளைப் பெற்றுச் சாதனை புரிந்து வந்தனர். எமது பாரம்பரிய கலாசார பண்பாட்டு விழுமியங்கள் கூட சிறந்தமுறையில் பேணப்பட்டு வளர்ச்சிப் படிகளில் எமது கலாசாரத்துக்குத் தனியிடத்தைப் பெற்றுக்கொடுத்தும் வந்தன. அன்று யுத்த அரக்கனின் கோரப் பற்களுக்கு இரையாவதைத் தவிர வேறொரு அச்ச உணர்வும் யாழ். மண்ணில் இருந்ததாகத் தெரியவில்லை. சுதந்திர வாசமுடைய ஒரு காற்றை யாழ். பூக்களால் சுவாசிக்க முடிந்தது.




இளம் பெண்ணொருத்தி நள்ளிரவு 12 மணியளவில் தன்னந்தனியாக உலாவ முடிந்தது. அப்போதெல்லாம் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவுகள் குறைந்திருந்தன (இல்லையெனலாம்) இப்படியான சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடுமையான தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். இப்படியான 'சட்ட நடவடிக்கைகள்' தான் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறாமல் இருக்க சிறந்த வழியாகவும் அமைந்திருந்தன. ஆனால் இப்போது நிலைமை வேறாகி யாழ்.சமூகம் அதல பாதாளத்தை நோக்கிக் காப்பாற்ற யாருமின்றிச் சென்றுகொண்டிருக்கிறது.

## சீரழிவை நோக்கி

'சூரியக்கதிர்' யாழ்.மண்ணின் மேனியை எப்போது சுட்டதோ அப்போதே அராஜகமும் சீரழிவுச் சாத்தானும் முளைவிடத் தொடங்கிவிட்டன. அது பலம், பலவீனத்தை அறிந்து சிறந்த தேர்வுநாடிக் களமாக இளவட்டங்களைச் சூழ்ந்துபிடித்து வெற்றியும் கண்டுள்ளது. எப்படி அது புகுந்து விளையாடியது என்பது தான் யாவரினதும் கேள்வி?

யாழ்ப்பாணத்தில் சீனிக்கும் மா வுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் சினிமாவுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்பது தற்போது யாம் அறிந்த வெளிப்படை உண்மை. சினிமா என்பது ஒரு பொழுது போக்கு ஊடகம் மட்டுமே. இந்தச் சினிமாப்படங்களைப் பார்த்து விட்டு தங்களது நிஜ வாழ்விலும் சினிமா போலவே அமைய வேண்டுமென்று நினைக்கிறார்கள். இதுவே பெரும் பிரச்சினையாக உருவெடுத்து உடல், உளத்தாங்கங்களுக்கு ஆளாகுகிறார்கள். அது மட்டுமல்ல பெண்களின் ஆடைக குறைப்புகளும் உள்ளங்கங்கள் தெரிய ஆடை அணிந்து வெளிநாட்டு நாகரிகக்காரர்கள் போல எங்கள் பண்பாட்டை மறந்து வீதிகளில் அலைவதுமாய் இருக்க, சினிமாப்படங்களில் விறுவிறுப்புக்களுக்காகக் காட்டப்படும் அடி தடிக் குழுக்களின் கோஷ்டி மோதல்கள் போல, இப்போது யாழ்ப்பாணத்திலும் கோஷ்டி மோதல்கள் பூதாகரமாக உருவெடுத்து உள்ளன. இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது இளவட்டங்களிடையே ஏற்பட்டுள்ள மதுபாவனைதான். இன்னொரு அதிர்ச்சிதரும் தகவல் என்னவென்றால்

**எம்.சுதேசிகன்**
**கோண்டாவில்.**

யாழப்பாணத்தில் தற்போதுள்ள மொத்த சனத்தொகையின் எண்ணிக்கைக்கு அதிகமான மதுபான வெற்றுப் போத்தல்கள் தென்னிலங்கை நோக்கிச் செல்வதற்காகக் கப்பலில் ஏற்றப்பட்டது தான். (மீண்டும் அவை நிரப்பப்பட்டு யாழ்.வருமா?)

இந்த நிலையில் இன்னுமொரு கசப்பான உண்மைநிலை என்னவென்றால் பதினைந்து(15) வயதுக் குட்பட்ட சிறுவர்களுக்கும் மது அருந்தும், புகைப்பிடிக்கும் பழக்கம் பீடித்துள்ளதாகத் தெரியவருகிறது. இதற்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற, நடைபெறுகின்ற இரவுநேரக் கலை விழாக்கள் சான்றுபகரும். ஒருபுறம் சினிமாவும் மதுவும் எங்கள் இளசுகளைச் சிப்பிலியாட்ட, மறுபுறம் நீலப்படக் கசட்டுக்களும் யாழ்ப்பாணத்தில் மற்றொரு பூகம்பமாக எழுந்துள்ளது. இந்த நீலப்படக் காட்சிகள் யாழ்.நகரத்தை அண்டிய பகுதிகளில் உள்ள மினி சினிமாத் திரையரங்குகளில் காண்பிக்கப்படுகிறதாம். இதனால் நிறைய வசூலும் வந்து குவிகிறதாம். இந்த மினி சினிமா அரங்குகளுக்கு அண்மையில் ரியூட்டறிகள் அமைந்திருப்பதுதானாம் நிறைந்த வசூலுக்குக் காரணம். பின்பு அந்த நீலப்படக் கசட்டுக்கள் தாராளமாக வாடகைக்கு விடப்படுகின்றனவாம். இப்படியான சம்பவங்களைக் கண்டு பொறுக்க முடியாத தமிழ்க் கட்சியொன்று சம்பந்தப்பட்ட திரையரங்கு உரிமையாளர்கள் உட்பட, பார்வையாளர்களின் அடையாள அட்டைகளைத் திரையரங்குக்குள் புகுந்து பறிமுதல் செய்து எச்சரிக்கையின் பின் அடையாள அட்டைகள் மீளக் கையளிக் கப்பட்டதாகவும் ஒரு தகவல்.

இது இப்படி இருக்க இடிபோல இன்னொரு செய்தி நெஞ்சை அடைக்கிறது.

## விலைமாதர் தாராளம்

யாழ்ப்பாணத்தில் விலை மாதர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கிறது. சிறிசுகள் முதல் பெரிசுகள் வரை இந்த எண்ணிக்கைக்குள் அடங்குகிறது. இதற்கு கோயில்கள், பாடசாலைகள் போன்ற புனிதமான இடங்களில் நடைபெறும் களியாட்ட விழாக்களே அதிகமான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கிறதாம். தமிழனுக்கு என்றொரு தனித்துவமான கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் உண்டென்பதை மறந்து சீரழிப்பவர்களின் மாய வலைக்குள் சிக்கிச் சாவென்று தெரிந்துகொண்டும் சகதிக்குள் புதைந்து கொண்டிருக்கிறது யாழ். சமூகம். மறுபுறம் வன்னியிலே பெரும் போரை எதிர்கொண்டு பொருளாதாரத் தடைக்குள் சிக்கித் தவிக்கும் வேளையிலும் அங்குள்ள தமிழ்ச் சமூகம் கலை, கலாசாரங்களை அழியவிடாது பெரும் முன்னெடுப்புக்களுடன் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதைப் பார்த்த பின்னாவது சீரழிந்த யாழ். சமூகம் தன்னைத் திருத்திக்கொள்ளுமா? இல்லையெனில் வன்னியாட்சி வந்த பின்தான் மாறுமா?

இனிவரும் காலத்தின் கைகளிலே தான் முடிவு தங்கியிருக்கிறது.

---

# ஜனாதிபதியின் வாக்கும் போக்கும்!

**உள் நாட்டில்** நடைபெறும் உக்கிரமான போர் - அப்பாவி மக்களை அநாதைகளாக்கி வருகின்றது; அகதிகளாக்கி வருகின்றது; அரிய உயிர்களை அபகரித்து வருகின்றது -

கோடிக் கணக்கான பணத்தைக் கொட்டியும் சிந்தியும் குதறியும் வருகின்றது; நாட்டின் முன்னேற்றத்தை நாசமாக்கி வருகின்றது -

ஆகவே நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் - விடுதலைப் புலிகளுடன் விரைந்து பேசுவேன்; யுத்தத்தை நிறுத்தி அவலச் சத்தத்தை ஒழிப்பேன; இனப் பிரச்சினையைத் தீர்த்து, நாட்டை எழுச்சிப் பாதையில் ஏற்றிச் செல்வேன் -

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை, இந்த நாட்டிற்கு 'இம்'மியும் பொருந்தாது; ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்து விட்டுச் சர்வாதிகாரத்தை கட்டியெழுப்ப அது வகை செய்கின்றது. ஆகவே -

நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், இந்த ஆட்சி முறையை உடனே நீக்கிவிட்டு, அமைச்சரவைக்கு நிறைவேற்று அதிகாரத்தை அளிக்கும் முறையை மீண்டும் கொண்டு வருவேன் -

ஜனாதிபதித் தேர்தலில் முதன்முறை போட்டியிட்ட போது சந்திரிகா அம்மையார் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் இவை!

**மணிமண்டபம்**

பத்திரிகைகளில் - வானொலியில் - தொலைக காட்சியில் - பொதுக் கூட்டங்களில் மீண்டும் மீண்டும் அவர் வலியுறுத்திவந்த வாக்குறுதிகள் இவை!

அந்தத் தேர்தலில் அவர் அமோக வெற்றியடைந்ததற்குக் காரணமாயிருந்த வாக்குறுதிகள் இவை!

அந்த வெற்றிக்குப் பின் நிறைவேற்றப்படாமல், இன்றுவரை இழுபட்டுக் கொண்டுவரும் வாக்குறுதிகளும் இவைதாம்!

விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி பேசத் தொடங்கியது உண்மைதான; அந்தப் பேச்சுவார்த்தை இடையிலேயே முறிந்து விட்டதும் உண்மைதான்!

முறிந்து போனதற்குக் காரணம் புலிகளே என அம்மையாரும், அம்மையாரே எனப் புலிகளும் குற்றஞ்சாட்டிக் கொண்டதும் உண்மைதான்!

இந்தப் "பிராக்கில்" --

ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதுபற்றி யாருமே பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை!

அந்தப் பதவிக்குரிய பவிசுடனும் பகட்டுடனும் வழமைபோல ஊரிலும் உலகத்திலும் உலா வந்து கொண்டிருந்தார் சந்திரிகா அம்மையார்!

போர் தொடர்ந்து கொண்டிருந்தது; பெருந்தொகைப் பணத்தை விழுங்கிக் கொண்டும் அரிய பல உயிர்களை பலியெடுத்துக் கொண்டும் அது தொடர்ந்து கொண்டேயிருந்தது!

ஜனாதிபதித் தேர்தல் மீண்டும் வந்தது; சந்திரிகா மீண்டும் களத்தில் குதித்தார்; பழைய வாக்குறுதிகளைப் புதுப்பித்துக் கொண்டார்; மீண்டும் வெற்றியை ஈட்டிக்கொண்டார்!

வாயால் உறுதியை வழங்கினாற் போதும், நடைமுறைப் படுத்துதல் அவசியமில்லை என்ற ஓர் உண்மையையும் நன்றாகத் தெளிந்து கொண்டார்!

ஆகவே - சமாதானத்தைக் காணச் சண்டையைத் தொடர்வதும் -

அமைதியை உருவாக்க ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதும் -

புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துக் கொண்டே அவர்கள் மீதுள்ள தடையை அகற்ற மறுப்பதும் -

போரை நடத்திக் கொண்டே பேச்சுவார்த்தையையும் நடத்தலாம் எனச் சொல்வதும் - முரண்பட்ட நிலையாகவோ பொருளற்ற முயற்சியாகவோ அவருக்குத் தெரியாதிருப்பதில் அதிசயம் இல்லை!

இரண்டாவது பதவிக் காலத்தின் எஞ்சியுள்ள ஆண்டுகளை இலகுவாகக் கழிப்பதற்கு -

சமாதான "மந்திரத்"தை உச்சரித்துக் கொண்டிருந்தாலே போதும்- எந்தவிதமான "கிரியை"களையும் செய்யத் தேவையில்லை என அவர் நம்புகின்றார் என யாராவது சொன்னால் -

எவ்வித சந்தேகமும் இன்றி அதை எல்லோருமே நம்பலாம் என்பதை அவருடைய வாக்கும் போக்கும் வடிவாகக் காட்டுகின்றன!

நான்கு மாதங்களாக, ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தைப் புலிகள் கடைப்பிடித்தபோது "இல்லாத பொல்லாத" பல காரணங்களைக் கூறி அதை நிராகரித்ததும் -

தம்மீதுள்ள தடையை நீக்கினால் மட்டுமே திறந்த மனதுடனும் புதிய நம்பிக்கையுடனும் சம அந்தஸ்துடனும் பேச்சுவார்த்தையிற் கலந்து கொள்ளலாம் எனப் புலிகள் விளக்கியதை, தங்கள் அந்தரங்க அபிலாஷைகளை மறைப்பதற்காக புலிகள் அபத்தமான நிபந்தனைகளை விதிக்கின்றார்கள் எனச் சொட்டை சொல்லித் தட்டிக் கழித்து வருவதும்-

புலிகளுடன் பேசாவிட்டால், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவே முடியாது; பேச்சுவார்த்தைக்கு வருமாறு அவர்களுக்கு எல்லோருமே அதி உச்ச அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தமிழ்த் தலைவர்களிடம் காலையிற் கூறுவதும் -

புலிகள் பேச்சுவார்த்தைக்கு வராவிட்டாலும், ஐ.தே.க. எதிர்த்துக் கொண்டேயிருந்தாலும் நான் கவலைப்படமாட்டேன்; ஏற்கனவே நான் தயாரித்த யாப்புச் சீர்திருத்தத்தை நிறைவேற்றிக் காட்ட என்னால் முடியும் என்று மாலையில் வீம்பு பேசுவதும் -

அவருடைய இரட்டை வேடத்தையும் இரட்டை நாக்கையும் துலாம்பரமாக்குகின்றன!

தன்னையும், தான் சார்ந்த அரசையும் ஐ.தே.க.வால் அசைக்கவே முடியாது என்ற அவருடைய அதீத நம்பிக்கை, அக்கினிச் சுவாலை "அவிந்ததன்" பின் ஆட்டங்காணத் தொடங்கிவிட்டது!

புலிகள் மீதுள்ள தடையை எடுக்கவே கூடாது என பேரினவாதிகள் கொடுத்து வரும் அழுத்தம் அந்த நம்பிக்கையை மேலும் தடதடக்கச் செய்து வருகின்றது!

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரை இப்போது அவசர அவசரமாக அழைத்திருப்பது, அந்த நம்பிக்கைச் சுவரில் ஏற்பட்ட வெடிப்புக்களைப் பூசி மினுக்குவதற்கே அல்லாமல், இனப் பிரச்சினைக்குரிய தீர்வை இன்றே கண்டு விடவேண்டும் என்பதற்காக அன்று!

தீர்க்கதரிசனத்துடனும் திடசித்தத்துடனும் தீர்வைப்பற்றிய தெளிவான முடிவுடனும் தமிழ்த் தலைவர்கள் இருப்பார்களேயானால், இப்போதைய நிலையில் அவர்கள் எவ்வாறு நடக்க வேண்டும் என யாருமே அவர்களுக்குச் சொல்லத் தேவையில்லை!

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பது தமிழன் கண்ட அரசியல் அறம் என்பதை அவர்களுக்கு நினைவூட்ட வேண்டிய அவசியமும் இல்லை!

**- சித்தன**

---

## போக்குவரத்து விதிகள் அரச ஊழியருக்கு விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

போக்குவரத்து விதிகள் தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள அரச திணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி சி.ஐ.உடுவல்ல மேற்கொண்டுவருகிறார்.

தற்போது பாடசாலை மாணவர்களுக்கு. போக்குவரத்து விதிகள் தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே.(ஐ-3-5)

## சங்கம் புனரமைப்பு

தென்மராட்சி,ஜூன்12

தென்மராட்சிப் பிரதேசத்தில் செயலிழந்துள்ள சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைக்கும் பணியினை கூட்டுறவுத்துறையினர் ஆரம்பித்துள்ளனர்.

இதன்பிரகாரம் சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் வடமராட்சி பிரதேச கூட்டுறவுப் பரிசோதகர் ஆ.நாகலிங்கம் தலைமையில் கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர கிராம அலுவலர் வை.இராசரத்தினம் கலந்துகொண்டார். (ஐ-117)

## கல்லூரி தின விழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்12

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்படும் கல்லூரி தின விழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத தலைவர் என்.மதனராஜனும் சிறப்பு விருந்தனர்களாக இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட பிரதான முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகமும்,கல்லூரியின்அதிபர் அருட்திரு. ஜே.ஏ.யேசுதாசனும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-3-5)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 02 - 09 - 1952

மறைவு 13 - 05 - 2001

எமது கோட்டத்தில் உள்ள
யா/வல்வை சிதம்பரக் கல்லூரியின் அதிபர்
**திரு.செ.யோகச்சந்திரன்**
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி இராயேஸ்வரி யோகச்சந்திரன்**
அவர்களின் 31ஆம் நாள் நினைவு நாளில், அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம்,
பருத்தித்துறைக் கல்விக் கோட்டம்.
(88899)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி**
**சங்கரப்பிள்ளை அன்னபூரணம்**
(குருமகராசித் தொண்டர்) (கண்டி வீதி, சாவகச்சேரி)

தோற்றம் 07-12-1926 | திதி: 12.06.2001 | மறைவு 24-05-2000

உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் பிரார்த்திக்கின்றோம்!

உசன், மிருசுவில். (88794) - குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 07 - 04 - 1964

உதிர்வு 13 - 05 - 2001

**திருமதி நடராசா அருளம்மா**

திதி: 12.06.2001 வைகாசி அபரபக்க ஷஷ்டி

இருவாரம் நிறையா மகவென்ன பாடுபடும்
ஈன்றெடுத்த அன்னை இதயமென்ன பாடுபடும்
பருவமுற்று நிறை நதியா இரங்கி நிற்க
பல்லோரும் ஏக்கமுறப் பறந்தனையோ எமைப்பிரிந்தே!

*ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (12.06.2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'அம்பாள் அகம்'
சித்தம்பாதி, கரணவாய். (88881) - குடும்பத்தினர்.

## தென்மராட்சியில் கொடுப்பனவுகள்

தென்மராட்சி,ஜூன்12

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மாதாந்த பொதுசன உதவிப் பணம், காசநோய், தொழுநோய், மார்பு நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோரில் உதவிப்பணம் பெறுவோருக்கான ஜூன் மாதக் கொடுப்பனவுகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய தபால் நிலையங்கள், மந்துவில், வரணி, மீசாலை, கச்சாய், விடத்தற்பளை, மிருசுவில் ஆகிய உப தபால் நிலையங்களில் இக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் எதிர்வரும் இருபதாம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-117)

## தீவகத்தில் தமிழ்தினப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்12

தீவக வலய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் இன்று கலைத்திறன் போட்டிகளும் நாளை எழுத்தாக்கப் போட்டிகளும் கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறுமென தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## பாடசாலைக்கு புதிய கிணறு

வடமராட்சி கிழக்கு,ஜூன்12

குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நீண்டகாலமாக நிலவிவந்த குடிதண்ணீர்ப் பிரச்சினை, அங்கு புதிய கிணறு ஒன்று அமைக்கப்பட்டதையடுத்து தீர்ந்துள்ளது.

பாடசாலை அதிபர் கே.கே.யோகநாதன் எடுத்த முயற்சியை அடுத்து பெற்றோர், பழைய மாணவர்களின் உதவியுடன் அங்கு புதிய கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-3-182)

## கலைவிழா

குருநகர்,ஜூன்12

நெடுந்தீவு மேற்கு சமூக விழிப்புக் குழுவினரின் கலைவிழா எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் நெடுந்தீவு மேற்கு அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். மனிதமுன்னேற்ற நடுநிலையத்தின் (கியுடெக்) அனுசரணையுடன் இக் கலைவிழா ஏற்பாடாகியுள்ளது. (ஐ-3-51)

## இளைப்பாற்று மண்டபம்

வடமராட்சி கிழக்கு,ஜூன்12

மணற்காட்டில் மீனவ இளைப்பாற்று மண்டபம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியினை பருத்தித்துறை பிரதேச சபை ஒதுக்கீடு செய்துள்ளது. (ஐ-3-182)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஜூன்12

நல்லூர்ப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் சனசமூக நிலையங்களுக்கிடையில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணி முதல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★கோண்டாவில் அமரகவி சனசமூக நிலையம் எதிர் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்.

★ கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையம் எதிர் கொக்குவில் ஸ்ரீவராகி சனசமூக நிலையம்.

★ திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம் எதிர் திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலையம். (ஐ-3-86)

## கூட்டுறவுப் பயிற்சி விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் நடத்தப்படும் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரணப் பிரிவு பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம்மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் இப்பயிற்சி நெறிக்குரிய விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்படுகின்றனர். (ஐ-3-5)

அமரர் பேராசிரியர் அ.துரைராஜா ஞாபகார்த்த

# இரத்ததான நிகழ்வும் அஞ்சலிக் கூட்டமும் - 2001

காலம்:- *நாளை (13.06.2001) புதன்கிழமை*
நேரம்:- *காலை 9.30 மணி*
இடம்:- *மாணவர் பொது அறை, விஞ்ஞானபீடம்*
அஞ்சலி உரைகள்:- **பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி)**
*(வாழ்நாள் பேராசிரியர், சமுதாய மருத்துவத்துறை)*
**பேராசிரியர் அ.நவரட்ணராஜா** (காப்பாளர்)
*(விலங்கு விஞ்ஞானத்துறை, விவசாய பீடம்)*

**அமரரின் நினைவஞ்சலி நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

குறிப்பு: அமரர் நினைவாக இரத்ததானம் செய்ய விரும்புவோரும் இந்நிகழ்வில் இரத்ததானம் செய்யலாம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:
**வினோ நகைப் பூங்கா**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/17054)

# நெஞ்சம் நெகிழும் ஏழாண்டு



ஜனனம் 13 - 12 - 1932

மரணம் 12 - 06 - 1994


**செல்வி சரோஜினிதேவி தில்லையம்பலம்**
*ஓய்வு பெற்ற ஆசிரியை - யா/க.ம.ம.வி.*

ஆசையோடு எமை வளர்த்து
ஆளாக்கிய பெரியம்மாவே!
அன்புடன் அறிவைக் கலந்தூட்டிய
அன்ரியம்மாவே!
ஏழாண்டுகள் சென்றாலும் மறந்து விடோம்!
என்றும் உங்கள் நினைவில் வாடும்:

*103, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (88856)

அன்புப் பெறாமக்கள்
வி.அரவிந்தன் - லண்டன்
வி.அகிலன் - கொழும்பு

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்



தோற்றம் 1947 - 09 - 14

மறைவு 2001 - 05 - 14

அமரர்
**சின்னன் தம்பிப்பிள்ளை**
(யாழ்.செயலக ஊழியர்)

**மண்ணக வாழ்வை நீத்து அமலனின்**
**விண்ணக வாழ்வை நாடிச் சென்ற**
**அண்ணலார் தம்பிப்பிள்ளை தன்னை நாளும்**
**எண்ணி எண்ணி நாமும் பார்க்கின்றோம் ஏங்கி ஏங்கி!**

அமரரின் மரணச் செய்தி கேட்டு எம்துயரில் கலந்து கொண்டு, இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவிகள் புரிந்து, எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் சாத்தி, துன்பத்தில் பங்குகொண்ட யாழ்.செயலகம் உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் திருநகர் வாழ் இளைஞர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (2001-06-13) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*72/45, இராஜசிங்கம் வீதி, திருநகர், யாழ்ப்பாணம்.* (88909)

*மனைவி* :- த.இருதயராணி
*மகன்* :- த.சசிக்குமார்
மற்றும் குடும்பத்தினர்

# 2004 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசமைப்பு திருத்தப்படமாட்டாது!

**கொழும்பிலிருந்து வெளியாகும் 'நவமணி' வார இதழின் 27-05-2001 ஆம் திகதிய பதிப்பில் 'பிளேட்டோ' என்பவர் வரைந்த கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 2006 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமராக மீண்டும் பதவிக்கு வருவார் என நகர அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்து பத்து ஆண்டுகள் பூர்த்தியாகும் 2004 ஆம் ஆண்டு, இலங்கையின் அரசமைப்பைத் திருத்தி நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறைக்குப் பதிலாக நிறைவேற்றுப் பிரதமர் ஆட்சி முறையை அறிமுகப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 50 தகவல் தொழில்நுட்ப நிலையங்களை ஆரம்பிப்பதென்று கடந்த வரவு - செலவுத்திட்டத்தின போது அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது. அந்தத் திட்டத்தின் கீழ் 4 ஆவது தகவல் தொழில்நுட்ப நிலையத்தை மாத்தறையில் திறந்து வைக்கும் வைபவத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இந்தக்கருத்தை முன்வைத்தார்.

தற்போது நிறைவேற்று ஜனாதிபதி முறையே நாட்டில் அமுலில் உள்ளது. தற்போதைய அரசமைப்பின்படி ஒருவர் இரண்டு முறையே ஜனாதிபதியாக இருக்கமுடியும்.

திருமதி சந்திரிகா குமாரதுங்க தமது இரண்டாவது ஜனாதிபதி பதவிக் காலத்தையே இப்போது கழித்துக் கொண்டு இருக்கிறார். அவருக்கு மேலும் ஒரு தடவையாவது ஜனாதிபதியாக பதவிக்குவர சட்டத்தால் இடம் வழங்கப்படவில்லை.

எனவே, 2006 ஆம் ஆண்டு அவரது தற்போதைய பதவிக்காலம் முடிவடைந்த உடன் அவர் பொது வாழ்வில் இருந்து ஓய்வு பெறவேண்டும். இல்லாவிட்டால் ஜனாதிபதி பதவிக்கு குறைவான பதவியொன்றுக்காக போட்டியிட வேண்டும்.

அவர் வேறு பதவி ஒன்றை வென்றால் மற்றொருவர் அவரது கட்சியின் தலைவராகவும், அரச தலைவராகவும் இருக்க நேரிடலாம்.

இவையெல்லாம் பெரும் சிக்கலையும் பலருக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்தக்கூடியனவாகும். எனவே திருமதி சந்திரிகாவே தொடர்ந்தும் அரச தலைவியாக இருக்க வேண்டுமென்றால் தற்போதைய அரசமைப்பைத் திருத்தவேண்டும்.

### அரசமைப்பில் திருத்தம் வேண்டும்

அதன் மூலம் ஒருவர் இரண்டு தடவைக்கும் மேலாக ஜனாதிபதியாக இருக்க முடியுமென்றோ அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவராக பிரதமர் இருப்பார் என்றோ அரசமைப்பை மாற்றவேண்டும்.

இதனைத்தான் சமரவீர கூறுகிறார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையைமாற்றி அமைக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பல்வேறு வழிகளில் முயற்சித்து வந்துள்ளது. 2006 ஆம் ஆண்டுக்குப் பிறகு திருமதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் வாழ்க்கையே அந்த முயற்சிகளுகக்கு முக்கிய காரணமாகியது.

ஆனால், இப்போது அவர்களது நிலைப்பாடு மாறியுள்ளதுபோல் தெரிகிறது. கூடியவரை நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரங்களை அனுபவித்து விட்டு திருமதி குமாரதுங்கவின் ஜனாதிபதி பதவிக்காலத்தின் முடிவில அரசமைப்பை மாற்றியமைப்பதே இப்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் குறிக்கோளாகவுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலுக்கு முனனர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எடுத்த சில நடவடிக்கைகளால் இது தெரியவந்தது.

தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் முன்வைத்த அரசமைப்புத் திருத்த ஆலோசனைப்படி நிறைவேற்று ஜனாதிபதிமுறை ரத்துச்செய்யப்படும் ஆனால் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலத்தின் முடிவின் பின்னரே புதிய அரசமைப்பு அமுலுக்கு வரும்.

அதாவது திருமதி சந்திரிகா கூடிய காலம் வரை நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்து விட்டு, அவருக்கு நிறைவேற்றுப் பிரதமராக ஆட்சியமைக்கக்கூடியவகையில் அரசமைப்பு திருத்தப்படும் என்பதே.

அமைச்சர் சமரவீரவின் கருத்துப்படி அரசாங்கம் இப்போது தமது திட்டத்தை மாற்றிக்கொண்டுள்ளது. அவரது கருத்துப்படி நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை இப்போதே திருத்தப்பட மாட்டாது. 2004 ஆம் ஆண்டே அது திருத்தப்படும். அப்படி அது திருத்தப்பட்டாலும் புதிய முறை 2006 ஆம் ஆண்டிலேயே அமுலுக்கு வரும்.

2004 ஆம் ஆண்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தற்போதைய அரசமைப்பை எப்படித் திருத்தப் போகிறது? இந்தக்காரியத்துக்காக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருக்கவேண்டும். அந்தப் பலம் அரசாங்கத்திடம் இப்போது இல்லை.

2004ஆம் ஆண்டு அந்த அதிகாரம் அரசாங்கத்துக்கு எங்கிருந்து கிடைக்கப்போகிறது? அந்தக் காலம் வரும்போது அரசாங்கத்துக்கு புதிதாக ஆதரவு வழங்கப்போகும் கட்சிகளோ அல்லது எம்.பிக்களோ அடையாளம் காணப்பட்டு விட்டனரா?

கடந்த அரசாங்கம் (1994-2000) அரசமைப்பைத் திருத்தி அமைக்கப் பலமுறை முயற்சி செய்தது. ஆனால நாடாளுமன்றத்தில் போதிய பலம் இல்லாததால் அந்த முயற்சிகள் தோல்வி அடைந்தன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அந்த அரசாங்கத்தை விட இந்த அரசாங்கம் பலம் குன்றியதாகும்.

எனவே, இந்த அரசாங்கம் எப்படி அரசமைப்பைத் திருத்தப்போகிறது. என்பது மர்மமாகவே உள்ளது.

முக்கியமான பிரச்சினை இவை ஒன்றுமல்ல. இன்றிலிருந்து மேலும் மூன்று வருடங்களுக்கு அரசமைப்புத் திருத்தப்பட மாட்டாது என்பதே அந்த முக்கிய விடயமாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வும் அரசமைப்புத் திருத்தம் மூலமே செய்வதென அரசாங்கம் கூறிவருகிறது. மேலும் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலை அமுல் செய்வதென்றால் அரசமைப்பைத் திருத்தியே ஆக வேண்டும்.

### இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 3 வருடங்கள் காத்திருக்க வேண்டும்

ஆனால், மேலும் 3 வருடங்களுக்கு அரசமைப்பு திருத்தப்படாது எனறே சமரவீர கூறுகிறார். அப்படியென்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் மேலும் 3 வருடங்கள் காத்திருக்க வேண்டுமா?

ஜனாதிபதிமுறை தான் 2004ஆம் ஆண்டு திருத்தப்பட இருக்கிறது. இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட்டால் அந்தத் தீர்வுக்காக அதற்கு முன்னரே அரசமைப்பு திருத்தப்படும் என்று எவராவது வாதிடலாம்.

ஆனால், தாம் அரசமைப்பை பகுதி பகுதியாக திருத்தப் போவதில்லை என்றும் அது ஒட்டு மொத்தமாகவே திருத்தப்படும் என்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 1994ஆம் ஆண்டிலிருந்தே கூறிவருகிறது.

அப்படியென்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண 2001ஆம் ஆண்டிலும் 2004ஆம் ஆண்டிலும் அரசமைப்புத் திருத்தப்படப் போவதில்லை என்பது திண்ணம். எதற்கும் 2004ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டும்.

அவ்வாறாயினும் அரசாங்கம் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்காகத் தயாரகிவருகிறதே.

ஓரிரு வாரங்களில் அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கலாம் என பல ஆய்வாளர்கள் கூறிவருகிறார்கள்.

பேச்சுவார்த்தை ஆரம்பித்தாலும் அமைச்சர் சமரவீரவின் கருத்துப்படி 3 ஆண்டுகளுக்கு அரசமைப்பு திருததப்பட்டு அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் முறையொன்று அமுலுக்கு வருமென எதிர்பார்க்க முடியாது.

இது தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே அளிக்கிறது.

இதனைத்தவிர, இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கத்திடம் வேறு வழிகள் இருந்தால் அரசாங்கம் அதனை மக்களுக்கு விளக்க வேணடும். ★

---

*மாவனல்லையில் நடந்த வன்முறைகள்:*

# கைதான சந்தேக நபர் கேகாலைச் சிறையில் மரணம்

## சிஹல உறுமய ஜனாதிபதிக்குப் 'பக்ஸ்'

கண்டி,ஜூன்12

மாவனல்லை வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கேகாலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் கடந்த சனியன்று சிறையில் மரணமடைந்துள்ளார்.

செனரத் பண்டார அழகக்கோன் என்ற சந்தேக நபரே மரணமடைந்தவராவார். இந்த நபருக்குத் திடீரென ஏற்பட்ட காய்ச்சலுக்கு சிறைச்சாலையில் தேவையான சிகிச்சை அளித்தோம். அச்சிகிச்சைக்கு மேலதிகமான சிகிச்சை அளிக்கவென கேகாலை மாவட்ட ஆஸ்பத்திரிக்கு மாற்றினோம். அங்கு சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும்போது அந்நபர் மரணமடைந்தார் என சிறைச்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் குறித்த நபரின் சடலத்தை உறவினர்களிடம் கையளித்ததாகவும் - அந்த அதிகாரி தெரிவித்தார்.

**இதேவேளை -**

மேற்படி கைதியின் மரணத்தில் சந்தேகம் நிலவுகின்றது. இது தொடர்பாகப் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த வேண்டும் எனக் கோரி சிஹல உறுமய கட்சி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், நீதி அமைச்சர் பட்டி வீரக்கோனுக்கும் அவசரக் கடிதங்களை 'பக்ஸ்' மூலம் அனுப்பி வைத்துள்ளது.

(க-7)

---

# வாசகர் திருமுகம்

## ஒரு மாணவனின் 'சீசன்' பிரச்சினை

நான் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எனக்குப் பின்பு இரண்டு சகோதரிகள் உள்ளனர். எனது தந்தை ரூபா 2500 பெறும் சாதாரண தொழிலாளி. அதுவே எமக்கு தஞ்சம். அதுவும் பற்றாக்குறை தான்.

நான் வலி.தென்மேற்கிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கிறேன். எனது குடும்ப நிலை காரணமாகவும், தூர இடம் என்பதனாலும் நான் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் 789 இல. பஸ்ஸில் யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து 888 பஸ்ஸில் பாடசாலை செல்கிறேன். (எமது பகுதியிலி ருந்து பாடசாலைக்கு பஸ் செல்வதில்லை) இப் பயணத்திற்கு எனக்கு ஒரு நாளைக்குப் பாடசாலை போய் வருவதற்கு 34 ரூபா செலவாகிறது. இது எனக்கு வசதியாது அல்ல. எனவே பருவகாலச் சீட்டு மூலமாகவே நான் கடந்த 4 வருடங்களாகப் பாடசாலை செல்கிறேன.

எனது உடல் நிலை சீரற்று சுகயீனமுற்று இருந்ததனால் 28.05.01 திங்கட்கிழமை தொடக்கம் 01.06.2001 வெள்ளிக்கிழமை வரை பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. இந்தக் கால இடைவெளிக்குள் ஏனைய மாணவர்கள் பாடசாலையில் 6ஆம் மாதத்திற்குரிய பருவ காலச் சீட்டுப் பெறுவதற்கு விண்ணப்பித்து பெற்றுவிட்டார்கள். நான் 04.06.2001இல் பாடசாலைக்கு சென்றேன். அங்கே எனது நிலை பற்றி கூறியபோது தாங்கள் 'சீசன்' பெற்றுவிட்டோம் என மாணவர்கள் தெரிவித்தனர்.

இது பற்றி வ.பி.போ. சபையின் நடத்துநரிடம் டிப்போவில் மாற்றித் தரும்படி கேட்டேன். அவர் பருவகாலச் சீட்டுக்களை பாடசாலைகளால் மட்டுமே மாற்றமுடியும் என்றார்.

எனது குடும்ப நிலை காரணமாக 34 ரூபா கொடுத்து பயணம் செய்வது முயற்கொம்பு போன்றது. எனவே இவ்விடயத்தில் எனக்கு போக்குவரத்துச் சபை முகாமையாளரின் நல்ல பதிலை எதிர்பார்க்கிறேன்.

*வட்டுக்கோட்டை* **பாதிக்கப்பட்ட மாணவன்.**

## நெடுந்தீவு வாசியின் 'ஓலம்'

மிகவும் வறிய நிலையில் இருக்கும் எமக்கு வீட்டுக் கூரை அமைப்பதற்கென தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் ரூபா 10 ஆயிரத்தை வழங்குவதாகக் கூறிய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள் எம்மை ஏமாற்றிவிட்டனர்.

நிலையான அத்திவாரத்தினைக் கொண்டு அமைந்துள்ளதும், கூரை அமைக்க வசதியற்ற நிலையில் உள்ளதுமான எங்களுடைய வீடுகளுக்கு வந்த நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள கூரை அமைக்க ரூபா 10 ஆயிரத்தை வழங்குவதாகக் கூறி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பெயர் பொறித்த விண்ணப்ப படிவத்தைத் தந்தனர்.

மழை காலம் நெருங்கப் போகிறது. வீட்டுக் கூரை பழுதடைந்துள்ளதால் என்ன செய்யப் போகின்றோம் என ஏங்கியிருந்த எமக்கு இந்த அதிகாரிகளின் வருகை பெரும் ஆறுதலை அளித்தது.

உடனே விண்ணப்ப பத்திரத்தைப் பூரணப்படுத்திவிட்டு, அதில் கேட்கப பட்டதற்கு இணங்க காணி உறுதியின் போட்டோப் பிரதியை விண்ணப்பத்துடன இணைப்பதற்காக பலத்த சிரமப்பட்டு யாழ்ப்பாணம் வந்து காணி உறுதியை போட்டோப் பிரதி செய்து ரூபா 30 பெறுமதியான முத்திரையை ஒட்டி விணணப்பத்தை உரிய அதிகாரிகளிடம் ஒப்படைத்தோம்.

ஆனால் கடந்த வெள்ளி (08.06.2001) நெடுந்தீவுக்கு வந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் அரசியல் கட்சி ஒன்றினால் சிபார்சு செய்யப்பட்ட 100 பேருக்குப் புதிதாக விண்ணப்பப் படிவத்தை வழங்கி தமக்கு முன்னாலேயே அவற்றை பூர்த்திசெய்து கொடுப்பனவுக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

எனவே, ஏற்கனவே விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்த எமது நிலை என்ன? அரசியல் வாதிகளின் செல்வாக்குகள் எதுவரை சென்று முடியப் போகின்றன. நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரும் உரிய பதில் தருவார்களா?

*நெடுந்தீவு* **'தீவான்'**

## குடிதண்ணீர் வசதி கிடைக்குமா?

கொழும்புத்துறை மக்கள் இடம்பெயர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகிய நிலையில் தற்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருகின்றனர். கொழும்புத்துறையில் வில்வந்தெரு, விபுலானந்தர் வீதி, புங்கன்குளம் வீதி, கநதர்மணியம் வீதி ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். ஆனால் இப்பகுதிக்கு இன்னும் குடிதண்ணீர் வசதி செய்யப்படவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. இப்பகுதியில் இருந்த குடிதண்ணர் கிணற்றையும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையுள்ளது.

மேற்படி பகுதிகளில் சில இடங்களில் குழாய்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. இப்பகுதி வாழ்மக்களின் நலன்விரும்பி ஒருவரால் யாழ்.மாநகர சபை குடிதண்ணீர் விநியோகப்பகுதிக்கு அண்மையில் ஒரு கடிதம் அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதிக்கான மின்சார வசதிகள் சீர்செய்யப்பட்டுள்ளதை இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இப்பகுதி மக்களின் நலனில் கரிசனை கொண்டு ஆக்கபூர்மான நடவடிக்கை எடுப்பீர்களா?

*கொழும்புத்துறையூர்.* **வ.பிரதாப்.**

---

# வில்பத்து காட்டுப் பகுதிக்குள் புலிகளின் ஏவுகணைத் தளம்?

## படையினரின் தேடுதல் வேட்டை ஆரம்பம்

கொழும்பு,ஜூன்12

வில்பத்துக் காட்டுப் பகுதிக்குள் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளைக் கண்டுபிடிப்பதற்காக படையினர் அங்கு பாரிய தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வியாழனன்று வில்பத்து வான்பரப்பில் எழுந்த புகைமண்டலம் விடுதலைப் புலிகளால் ஏவப்பட்ட ஏவுகணைகளில் இருந்து கிளம்பியவை என்று விமானப்படையின் விசேட குழுவொன்று கண்டறிந்ததை அடுத்தே இத்தேடுதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வில்பத்துக் காட்டுப் பகுதியில் இருந்து சுமார் பத்து மைல் தொலைவில் உள்ள பழைய எழுவான்குளம், ஈச்சந்தீவுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் அணி ஒன்று ஊடுருவி இருப்பதாகப் படையினருக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

கடந்த வியாழனன்று இப்பகுதியில் கங்கேவாடி பாதுகாப்புச் சோதனை நிலையத்தில் இருந்து இரு கிலோமீற்றர் தொலைவில் வைத்தே புலிகள் விமானம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

வில்பத்துக் காட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகளின் ஏவுகணைப் பயிற்சித் தளம் இருக்கக்கூடும் என்று படைத்தரப்பில் சந்தேகிக்கப் படுகிறது.

(ஐ)

# நுண்கலைப் பீடத்திற்கு அனுமதி; தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை பீடத்தில் இசை மற்றும் நடனம், சித்திரமும் வடிவமைபபும் ஆகிய கற்கை நெறிகளைத் கற்க விரும்பும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பட்டப்படிப்புக்கான கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான மாணவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு யாழ்பல்கலைக கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

1999, 2000 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பழைய பாடத்தித்தின்படி 180 புள்ளிக்கு மேல் எடுத்தவர்களும் புதிய பாடத்திட்டத்தின் படி 135 புள்ளிக்கு மேல் எடுத்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

நுண்கலைமாணி இசைத்துறைக்கு உயர்தரத்தில் சங்கீதமும் - நடனத் துறைக்கு பரத நாட்டியமும், ஒரு பாடமாக எடுத்திருக்க வேண்டும்.

சித்திரமும் வடிவமைப்பும் துறைச்கு பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்திபெற வேண்டும். மேலதிக தகவல்களை விண்ணப்பதாரிகள் யாழ்.பல்கலைக் கழக பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக இல.558 இல் ஒரு பரப்புக் காணியில் இரு கடைகள் விற்பனைக்குண்டு. ஒவ்வொரு கடையும் தலா **15'x30'** விஸ்தீரணம் உடையவை. தொடர்புகளுக்கு: **T.P** 597450/077-307227. **(C/17039)**

### இது இந்து மதம்

தகுந்த சான்றுகளுடன் இந்து மதம் பற்றிய உண்மைகளைத் தெளிவாகச் சொல்கிறது சாமிஜி எழுதிய "இது இந்து மதம்". யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஆணிவேராகிய சைவ சித்தாந்தத்தில் ஆர்வம் கொண்டோர் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம். விலை ரூபா 50/=. தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88876)

### ஆண்டு 5 புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் 2001க்கான அம்பிகைபாகனின் புத்தம் புதிய வழிகாட்டி, சொற்பப் பிரதிகளே கைவசம் உள்ளன. விலை ரூபா 240/=. தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88877)

### ஆங்கிலம் WORK BOOK

ஆண்டு 6 மாணவர்களுக்கான ஆங்கில பாடத்துக்குரிய **New class work Book by Premkumar**. தரமான புத்தகம். விலை ரூபா 70/=. தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88878)

### Birthday Cards

புத்தம் புதிய டிசைன்களிலான வண்ணமிகு **Birthday Cards, Wedding Cards** என்பன விற்பனையாகின்றன. தொகையாக வாங்குபவர்களுக்கு விசேட கழிவு தரப்படும். தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88879)

### விற்பனைக்கு

**EN.**தொடர் இலக்கமுடைய **A-50** கேம்பிரிச் கார் (நல்ல நிலையில் உள்ளது) உடன் விற்பனைக்கு உண்டு. மோட்டார் சைக்கிள் மாற்ற விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:- **S.**அன்ரன், அளவெட்டி **OR C.L.S** வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (88940)

### தவறிவிட்டது

கோட்டைக்காடு மல்லாகம் என்ற முகவரியைச் சேர்ந்த சின்னத்துரை இன்பராஜா என்பவருடைய விசேட அ.அ. (இல.0906019509) பொன்னாலை சோதனைச் சாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து விஜய் சில்க்ஸ், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (88934)

பத்மநாதன் கணேசராசன் என்பவருடைய தேசிய அ.அ.(இல.562692029**V**), விசேட அ.அ.(இல.0902020077), திருமதி தெய்வானை கனகசபை என்பவருடைய தேசிய.அ.அட்டை (இல. 236010562**V**), விசேட.அ.அட்டை (இல. 0902029633) என்பன 09.06.2001 அன்று யாழ்ப்பாணத்திற்கும் கொக்குவிலுக்கும் இடையில் (**K.K.S.**வீதியில்) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சேச் லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (88933)

கலைமணி ஒழுங்கை, கட்டைப்பிராய் எனும் முகவரியுடைய மகாதேவன் பார்வதி என்பவருடைய தேசிய அ.அ.(இல.755230928**V**), விசேட அ.அ.(இல.0903015506) என்பன ஆனைப்பந்திக்கும் நல்லூருக்கும் இடையில் 07.06.2001 அன்று தவறிவிடடன. கண்டெடுத்தவர்கள் திருவள்ளுவர் அச்சகம், நல்லூர் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (88939)

பாசையூரைச் சேர்ந்த **K.**யதீந்திரதாஸ் என்பவருடைய சைச்சங்கிலி (யாழ்.நவீன சந்தையில் இருந்து) சுண்டுக்குழி ஊடாக பாசையூருக்கு இடையில் 10.06.2001 ஞாயிற்றுக் கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஆர்.வி.ஜி மருந்தகத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (88937)

கோபாலு தவனேசன் என்பவருடைய தே.அ.அ. (இல.41962675**V**)யும, வி.அ.அட்டையும், ஒரு பவுண் தங்கச் சங்கிலியும் அச்சுவேலி சலூனில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அச்சுவேலி நேசன் கடையில் ஒப்படைத்துதவவும். (88926)

### படிவம்

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மனிதவள வங்கியில் பதிவு பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. முடிவு திகதி 2001-06-25. பாரதி, 430, காஙகேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். **(C/17025)**

### வீடு விற்பனைக்கு

**234/4**ஆம் இலக்கமுடைய **K.K.S** வீதியில் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி ஆனந்தசபாபதி, **234/4, K.K.S.** வீதி, யாழ்ப்பாணம். (88916)

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. பழைய தொடர்பு உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்:- தூக்கா திருமண சேவை, 178,நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (88941)

## திறந்த பல்கலை பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜுன்12

இலங்கைத் திறந்த பல்கலைக் கழக பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா 2000 - 2001 ஆம் கல்வி ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கடந்த காலப் பரீட்சை வினாக்களைப் பார்வையிட விரும்பினால் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நிலைய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (க-6)

# கறுப்பு உடை அணிந்து வந்து வீடு புகுந்து தாக்கிய கும்பல்!

## கரணவாய்ப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,ஜுன்12

வீட்டைச் சோதனையிடப் போவதாகக் கூறிக்கொண்டு இரவுவேளை வீடு ஒன்றினுள் புகுந்த கறுப்புஉடை அணிந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டில் இருந்தவர்களைக் கொட்டன்களால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர்.

கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் கடந்த சனி இரவு 9.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

இராணுவத்தினர் போன்று காணப்பட்ட அந்த நபர்கள் கறுப்பு உடையும், தொப்பியும் அணிந்து இருந்தனர்.

முதலில் வீட்டில் இந்தவர்களை அடையாள அட்டைகளுடன் வெளியே வருமாறு அழைத்த அந்த நபர்கள் அவர்கள் வெளியே வந்ததும் அவர்கள் கையில் எடுத்துவந்த லாம்பினை அடித்து நொறுக்கி அணைந்து விட்டு இருளில் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் காயமடைந்த நான்கு பிள்ளைகளின் தாயான தவமனோகரன் தவமலர் (வயது 30), இவரது சகோதரரான விஸ்வலிங்கம் ரவீந்திரன் (வயது 34), இவர்களது தந்தையான சின்னத்துரை விஸ்வலிங்கம் (வயது 65) ஆகியோர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கானோர் கூக்குரலிட்டதும் அயலவர்கள் அங்கு வரவே அந்தக் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

தாக்கப்பட்ட குடும்பத்தினர் பின்னர் அது குறித்து படைமுகாமில் முறையிட்டுள்ளனர். ஆனால் பொலீஸாரிடம் சென்று முறையிடுமாறு படையினர் அவர்களிடம் கூறியுள்ளனர்.

படையினரிடம் முறையிட்டு விட்டு வீடு திரும்பிய சிறிது நேரத்தில் அங்கு வந்த அக்கும்பலைச் சேர்ந்தோர் மீண்டும் வீட்டில் இருந்தோரைத் தாக்க முற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பின்னர் இச்சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்ற படையினர் ஒருவரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### கரையோர மாவட்டத்துக்கு தமிழ்க்கட்சிகள் ஆதரவுதராவிடில்

# வடக்கு – கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் எதிர்க்க நேரிடலாம்

## முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் கூறுகிறார்

கொழும்பு,ஜுன்12

முஸ்லிம்களுக்கென தனிமாவட்டம் அமைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு தமிழ்க்கட்சிகள் எதிர்புத் தெரிவித்தால் வடக்கு - கிழக்கை இணைப்பதற்கு நாம் வழங்குவதாக உறுதியளித்துள்ள நிபந்தனையுடனான ஆதவை விலக்கிக்கொள்ள நேரிடும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரமுகரான எம்.எம்.அபுல் கலாம்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"1987 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்பு வடக்கு-கிழக்கு மாகாணங்கள் 13 ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டம் மூலம் தற்காலிகமாக இணைக்கப்பட்ட போது முழு இலங்கையும் அதனைப் பூரணமாக எதிர்த்தது. இருந்தபோதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை மதித்துவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களும் வடக்கு-கிழக்கு இணைப்பை நிபந்தனையுடன் ஆதரிப்போம்' என்ற நிலைப்பாட்டை எடுத்தனர்.

இந்த இணைப்பின் மூலம் மேலும் சிறுபான்மையாக மாறும் முஸ்லிம், சிங்கள சமூகங்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படவேண்டும் என்பதே முஸ்லிம் காங்கிரஸின் நிபந்தனையாக இருந்தது. இன்றும் இந்த நிலைப்பாட்டுடனேயே நாம் இருந்து வருகிறோம்.

கரையோர மாவட்டம் தனியே முஸ்லிம்களுக்கு மட்டுமே உரியதல்ல. தமிழ் பேசும் மக்களுக்குமுரியது என்பதை நமது கட்சி சரியாக எடுத்து விளக்கிருக்கிறது. இருந்தபோதும் தொடர்ந்தும் தமிழ் கட்சிகள் வரிந்து கட்டிக்கொண்டு இந்தக் கோரிக்கையை எதிர்ப்பது கவலைக்குரியது. இதன் மூலம் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு நாம் வழங்கிவரும் நிபந்தனையுடனான ஆதரவை இழக்க நேரிடும் என்பதை தமிழ்க் கட்சிகளுக்கும் அமைப்புகளுக்கும் தெரிவிக்க வேண்டுகிறோம்-

என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-7)

## விசேட கூட்டம்

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் சம்மேளனத்தின் விசேட கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கச்சேரியடி சோமசுந்தரம் அவெனியுவில் உள்ள சோமசுந்தரம் முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கடந்த 5ஆம், 6ஆம் திகதிகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சகல சம்மேளனங்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## அருட்தந்தையின் குருத்துவ வைரவிழா

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்தந்தை எஸ்.என். அருள்நேசன் (அ.ம.தி) அவர்களின் குருத்துவ வைரவிழா இன்று கொழும்பில் உள்ள அமல மரித் தியாகிகள் இல்லத்தில் கொண்டாடப்படவுள்ளது.


1941ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர், 1954ஆம் ஆண்டில் புனித பத்திரிசியார் கல்லூரியின் முதல்வது சுதேச அதிபராகப் பொறுப்பேற்று 1960 வரை கடமையாற்றினார்.

பின்னர் 1961ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இறைபணியாற்றிய இவர், அந்த ஆண்டிலேயே இறைபணியாற்றுவதற்காக அபுதாபிக்குச் சென்றார்.தற்போது கொழும்பில் உள்ள அமலமரித்தியாகிகள் இல்லத்தில் இவர் ஓய்வு எடுத்து வருகிறார். (க-6)

# முதலாம் ஆண்டு நிறைவு

## நெஞ்சுருகும் நினைவஞ்சலி

மண்மகிழ 18 - 12 - 1969



கண்நெகிழ 24 - 05 - 2000

### அமரர் கந்தசாமி சிவபாலன் (B.Com)

*(ஆசிரியர், பளை மத்திய கல்லூரி)*

திதி:12-06-2001

மகன் சுகிர்தன்

அப்பா நான் பிஞ்சு அறியாத வயதினில்
தப்பேது செய்தேன்? தவிக்க விட்டுப் போனதேன்?
எப்போதும் வாசலை எட்டி எட்டிப் பார்க்கின்றேன்
அப்பா! கண்ணீர் சிந்தி அழுதேங்கக் காலமோ...?

வெடித்தது நெஞ்சம், விக்கி அழுதன வாய்கள், கேட்டுத்
துடித்தவர் சூழத் தேம்பி சோகத்தின் எல்லை கண்டோம்!
அடித்தழு தாண்டு ஒன்று அகன்றது இறைவனாரின்
அடித்தலம் அடைக சாந்தி அமையட்டும் பணிகிறோமே!

அன்பு மனைவி: சி-சந்திராதேவி,
அன்பு மகன்: சி.சுகிர்தன்

நிரந்தர முகவரி:
*முதலாம் கட்டை வீதி,*
*கிராம்புவில்,*
*சாவகச்சேரி வடக்கு.*

தற்காலிக முகவரி:
*சீனட்டி, வதிரி,*
*கரவெட்டி.*

(88947)

உ

குப்பிளான்

### கற்கரைக் கற்பக விநாயகர் திருக்கோயில்

## மகா கும்பாபிஷேகப் பெருவிழா

எண்ணெய்க்காப்பு: **இன்று (12.06.2001) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிமுதல் பி.ப.2 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தலாம்.**

மகா கும்பாபிஷேகம்:**நாளை (13.06.2001) புதன்கிழமை மு.ப. 10.53 மணிமுதல் பகல் 11.40 மணிவரையில் நடைபெறும்.**

பிரதிஷ்டா பிரதம குரு:
சிவாகமகிரியாபானு **சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள்.**

★ தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று இறுதிநாள் மகா சங்காபிஷேகம் நடைபெறும்.

மகா கும்பாபிஷேக நிகழ்வில் அடியார்கள் அனைவரையும் கலந்து விநாயகப்பெருமானின் திருவருளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**- ஆலய பரிபாலன சபை, குப்பிளான்.**

(88935)

# மரண அறிவித்தல்

## திருமதி றெஜிஸ் திரேசம்மா

கோவிந்த புலம், இளவாலையைப் பிறப்பிடமாகவும் சுருவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றெஜிஸ் திரேசம்மா 09.06.2001 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் றெஜிஸ் (இன்பம்) அவர்களின் அன்பு மனைவியும், அனிற்றாவின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை மற்றும் லூர்து மேரியின் (இந்தியா) அன்பு மகளும், காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை பிறிஜெற் (புஷ்பம்) அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோசப்பின் மற்றும் மரியதாஸ் (இளவாலை), பற்றிமா (கொழும்பு), செல்லதுரை (பிரான்ஸ்), இம்மானுவேல் (கொலண்ட்), ராஜன் (கனடா), அமலன் (பிரான்ஸ்), விமலன் (இந்தியா), ரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.06.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சுருவில் அன்னைமரி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுருவில்,*
*ஊர்காவற்றுறை.*

தகவல்:
மேரி மெக்டலின்
(மைத்துனி) (88946)

# நிர்வாக சேவைப் பரீட்சை

# வயது எல்லையைக் கூட்டுக!

## ஜோசப் பரராஜசிங்கம் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜூன் 12

வடக்கு — கிழக்கு மாகாணத்திற்கென விசேடமாக நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்கா நிர்வாகசேவைப் பரீட்சையில் தோற்ற இருப்போரின் வயதெல்லையை 32 ஆக உயர்த்தும்படியும், அதேவேளை அரச சேவையில் கடமை புரியும் பட்டதாரிகளுக்கான வயதெல்லையை நீக்குமாறும் அல்லது அதனை 40 வயதாக உயர்த்தும்படியும் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், நிர்வாக சீர்திருத்த அமைச்சின் செயலாளர் எம். என். யுனெயிட்டிடம் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக ஜோசப் பரராஜசிங்கம், செயலாளர் யுனெயிட்டுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

சென்ற 25- 05- 2001ஆம் திகதி வெளியான 1186 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் தாங்கள் வெளியிட்டுள்ள அறிவித்தலின்படிவடக்கு--கிழக்கு மாகாணத்திற்கெனஸ்ரீலங்கா நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை ஒன்றை நடந்தவுள்ளீர்கள். இதற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 26– 6–2001 என அறிவித்துள்ளீர்கள்.

ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்குப் பிற்பாடு வடக்கு— கிழக்கு மாகாணத்திற்கென பிரத்தியேகப் பரீட்சைஒன்றை நடத்த முற்பட்டுள்ள தங்களின் நல்ல முயற்சியைப் பாராட்டுகின்ற அதேவேளை, இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகளின் வயது எல்லையை 32 ஆக உயர்த்த வேண்டியதன் அவசியத்தையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

நாட்டின் தென்பகுதிகளில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்கள் எதுவிதபிரச்சினையும், தடங்களும் இன்றி இயங்குகின்றன. ஆனால், வடக்கு— கிழக்கில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள் போர்சூழல் காரணமாக இடையிடையே பல தடங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றன. இதன் காரணமாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் சராசரி 3-4ஆண்டுகள் தங்கள்பட்டப் படிப்பில் பின்தள்ளப்பட்டுள்ளனர். எனவே அவர்களில் பெரும்பாலானோர் தங்கள் பட்டப்படிப்பை முடிக்கும் பொழுது 30வயதையடைந்து விடுகின்றனர். எனவே அவர்களது வயது எல்லையை தென்பகுதி பல்கலைக்கழக பட்டதாரிகளுடன் ஒப்பிடுவது பொருத்தமற்றதென நான் கருதுகின்றேன்.

இனப் பிரச்சினை ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இயல்பு நிலை ஏற்படும் வரை இப்பகுதியைச் சேர்ந்த பட்டதாரிகள் இது போன்ற பரீட்சைகளுக்குத் தோன்றும் பொழுது அவர்களது வயது எல்லையில் மாற்றம் செய்வதன் மூலமே அவர்களுக்கு நியாயம் கிடைக்கமுடியும்.

எனவே இப்பிரச்சினைகளை கருத்திற்கொண்டு இப்பரீட்சைக்குத் தோற்றும் பட்டதாரிகளின் வயது எல்லையை 32 ஆக உயர்த்தும்படியும் 'அதேவேளை, அரச சேவையில் உள்ள பட்டதாரிகளுக்கு வயது எல்லையை நீக்கியோ அல்லது 40 ஆக உயர்த்தும்படியோ தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்— என்று தெரிவித்துள்ளார்.

(ஐ)

# குடாநாட்டில் பல இடங்களில் நாளை அந்தோனியார்திருவிழா

## பாஷையூரில் திருச்சொரூபத் தேர்ப்பவனி

யாழ்ப்பாணம், ஜூன் 12

புனித அந்தோனியார் தினமான நாளை புதன்கிழமை குடாநாட்டில் உள்ள பெரும்பாலான அந்தோனியார் தேவாலயங்களில் திருவிழாத் திருப்பலிகள் நடைபெறவுள்ளன.

பாஷையூரிலும் புனித அந்தோனியார் தேவாலயத்தின் 151 ஆவது ஆண்டு திருவிழாவை ஒட்டிநாளை காலை 5.30 மணிக்கு முதலாவது திருப்பலியும் —

யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் காலை 7 மணிக்கு கூட்டுத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

அதேவேளை, நற்கருணை திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி, 5.15 மணிக்கு திருப்பலியும் நற்கருணைப் பவனியும், ஆசீர்வாதமும் நடைபெறும் என்றும் ஆலய பங்குத்தந்தை அருட்திரு. சாள்ஸ் கொலின் அறிவித்துள்ளார்.

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயதிருவிழாத் திருப்பலி நாளை காலை 7 மணிக்கு பங்குத்தந்தை அருட்திரு. எம். ஞானரத்தினம் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெறும்.

பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலய திருவிழாத் திருப்பலி நாளை காலை 7 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து திருச்சொரூபப்பவனி இடம்பெறும்.

இதேவேளை —

புதிய பங்காகப் பிரிக்கப்பட்டுள்ள மணற்காடு பங்கில் உள்ள புனித அந்தோனியார் ஆலய திருவிழாத் திருப்பலி பங்குத்தந்தை எஸ். ஏ. ஜோர்ஜ் தலைமையில் நாளை காலை 7 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலய திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாக பங்குத்தந்தை அருட் திரு. ஏ. எவ். பேனாட் தெரிவித்தார்.

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நாளை காலை ஒப்புக்கொடுக்கப்படும் என்றும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப சுற்றுப் பவனி இடம்பெறும் என்றும் பங்குத்தந்தை தெரிவித்தார்.

மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தின் முகப்புப் பகுதியை விரிவாக்கும் நோக்குடன், பங்கு மக்களின் பங்களிப்புடன் அருகில் உள்ள காணி கொள்வனவு செய்யப்பட்டு அந்தோனியார் ஆலயத்தின் முகப்புப் பகுதி விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(க-6-3-135)

# மக்கள் ஒத்துழைப்புவழங்கினால் கசிப்பை ஒழிக்க முடியும்

## யாழ். பொலீஸ் அத்தியட்சகர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 12

குடாநாட்டில் அதிகரித்து வரும் கசிப்பு உற்பத்தி, விற்பனை மற்றும் திருட்டு ஆகியவற்றை ஒழிப்பதற்கு அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்கள், சமூக சேவை அமைப்புக்கள் மட்டுமன்றி பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று யாழ். மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் சூடாஹெட்டி தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்.பொலீஸ் நிலையத்தில் கிராம சேவையாளர்கள் மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் —

சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு பொலீஸாருக்கு உதவியாக கிராம சேவையாளர்கள் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

தத்தமது பகுதிகளில் நடைபெறும் சட்ட விரோதச் செயல்கள் பற்றி உடனடியாகப் பொலீஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க வேண்டும்.

நேரடியாக வரமுடியாதவர்கள் 2222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும் — என்றார்.

(க-4)

# மாணவருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு

சண்டிலிப்பாய், ஜூன் 12

மாதகல் கல்வி அபிவிருத்தி சபை, மாதகல் பகுதியில் ஜி.சீ.ஈ. சாதாரண, உயர்தரப் பரீட்சையிலும், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையிலும் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கவுள்ளது.

(க-135)

# நீதிமன்றில் யுவதி ஆஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 12

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யுவதி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

வேலணையைச் சேர்ந்த நி. தணிகைச்செல்வி என்பவரே யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவராவார். இவரை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் சு.பா. கப்பிரமணியம் உத்தரவிட்டார்.

(உ-5)

## பாலர் பாடசாலை செல்லும் வழியில்

# சிறுமியைக் கடத்திச் சென்று நகைகளை அபகரித்த நபர்!

தனது பேரனாருடன் பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருந்த சிறுமி ஒருத்தியைத் தந்திரமாக ஏமாற்றிக் கடத்திச் சென்ற நபர் ஒருவர் சிறுமி அணிந்திருந்த நகைகளை அபகரித்துக் கொண்டு அவளை அநாதரவாகக் கைவிட்டுச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்றது.

திருநெல்வேலி சிவன் வீதியில் உள்ள பாலர் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த சிறுமியே கடத்திச் செல்லப்பட்டு பின்னர் தாளையடிப் பகுதியில் அநாதரவான நிலையில் கண்டு பிடிக்கப்பட்டார்.

வீதியில் சிறுமியை வழிமறித்த நபர் அவளை அவசரமாக அழைத்து வருமாறு பாடசாலை அதிபர் கூறியதாகப் பேரனிடம் கூறி அவரை ஏமாற்றிவிட்டுச் சிறுமியைச் சைக்கிளில் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

சிறுமி அணிந்திருந்த காப்பு, சங்கிலி, தோடுகள் என்பனவே அபகரிக்கப்பட்டன.

நேற்றுப் பிரஸ்தாப சிறுமியின் பிறந்ததினம் என்றும் கூறப்பட்டது.

(ஐ-86)

# சமய சந்திகளில்

கொக்குவில் மாத்தனை கந்தசாமிகோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

25 ஆம் திகதி சப்பறமும் 26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 27 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(க-5)

★ ★ ★

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை முற்பகல் 10.53 மணி முதல் 11.40 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக்குருக்கள் மகாகும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைப்பார்.

(க–7)

★ ★ ★

சாவகச்சேரி,சங்கத்தானை கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(க-10)

★ ★ ★

சங்கானை சிலம்புப் புளியடி ஞானவைரவர் ஆலயத்தின் பூங்காவனத் திருவிழா இன்று காலை 8 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஆசிரியர் ஆறு. திருமுருகனின் சமயச் சொற்பொழிவும், இன்னிசை கானமும், நடிகலாமணி சின்னமணி குழுவினரின் 'சத்தியவான் சாவித்திரி' நாடகமும் இடம்பெறும்.

(க–7)

★ ★ ★

காரைநகர் களபூமி திக்கரை முருக மூர்த்தி கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(உ–3)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் பாடசாலைகளிடையேயான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள 17 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் மோதுகின்றன.

(86)

★ ★ ★

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4. 30 மணியளவில் இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் ஸ்ரீ மீனாட்சி வி. கவும் கைதடி வளர்மதி வி. கவும் மோதுகின்றன.

(ஐ–3-86)

★ ★ ★

சுப்ரா வெற்றிக் கிண்ணத்துக்கான 7 பேர் அணிகளுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்சியாளர் வி. கே. சண்முகலிங்கம் பிரதம விருந்தினராகவும் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி சி.வி.செல்லையா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (ஒ)

# மீனவர்கள் எண்மர் கைது

பருத்தித்துறை சுப்பர்மடத்தில் இருந்து நேற்று அதிகாலை மீன் பிடிக்கச் சென்ற எட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பருத்தித்துறையில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வை. ஆனந்ததேஸ்வரன், செ. இராசகுமார், தி. ரூபன், கே. ஜெயசிறி, த. ரவிகரன், தே. தேவரஞ்சன், இ ராஜ்குமார், கி. தர்மலிங்கராசா ஆகியோரே கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுப்பர்மடம் மீன் பிடிச் சங்கம் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் எஸ். சிறிரங்கேஸ்வரனிடம் முறைப்பாடு செய்துள்ளது.

(உ-3-117)

# கலைஞர்கள் கலந்துரையாடல்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட கலைஞர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். நகரில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்தின் அலுவகத்தில் இடம்பெறும் என்று பிரதேச செயலர் சு புத்திரசிகாமணி அறிவித்துள்ளார்.

(உ-3)

## அரசு தொடர்ந்தும் பாரபட்சம் காட்டுகிறது

# தவிர்க்க முடியாத சூழ்நிலையில் வேலை நிறுத்தத்தில் குதிக்கிறோம்!

## டாக்டர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்12

விசேட கொடுப்பனவு தொடர்பான எமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை வடக்கு-கிழக்கு அரச ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகளின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்து நடத்தப்படும்.

இவ்வாறு அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளை உறுப்பினர்கள் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கூட்டாக அறிவித்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவர்கள் விடுதியில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் சங்கத்தின் யாழ்.கிளையின் உப தலைவர் டாக்டர்.கே.இளங்கோஞானியார், செயலாளர் எஸ்.குமரவேள் உட்பட சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு தமது வேலை நிறுத்தம் தொடர்பாக விளக்கமளித்தனர். அறிக்கை ஒன்றினையும் அவர்கள் வெளியிட்டனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1996இன் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையும் குடாநாட்டின் ஏனைய வைத்தியசாலைகளும் மக்களுக்கு உரிய, தரமான சேவையை முழு அளவில் வழங்க முடியாத இக்கட்டான நிலையில் இயங்கி வருகின்றன.

1990இல் தொடங்கி இன்று வரை தொடரும் மருந்துகள், ஒட்சிசன் சிலிண்டர்கள், உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டுடன் 1996இன் பின் மோசமாகியுள்ள சகல நிலை ஊழியர்களுக்குமான பற்றாக்குறையுமே இந்த இக்கட்டான நிலைக்கு காரணமாகும்.

யாழ்.மாவட்ட சுகாதார சேவையின் சீர்குலைவிற்கு காரணமான விடயங்கள் பற்றி எமது நிர்வாக அதிகாரிகளும் நாமும் எமது மேலதிகாரிகளிடமும், உள்ளூர் அரசியல் தலைவர்கள், மக்கள் எனப் பலரிடமும், தொடர்ந்தும் எடுத்துக் கூறி வந்த போதும் இன்று வரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை.

### அமைச்சு புறக்கணிப்பு

யாழ்ப்பாணத்தில் வைத்திய நிபுணர்களுக்கான 90 வீத வெற்றிடங்களும் ஏனைய வைத்திய அதிகாரிகளுக்கான 50 வீத வெற்றிடங்களும் இருந்து வருவதுடன் நிலைமை மேலும் மோசமடையும் வாய்ப்புகளே உள்ளன. ஏனெனில் கடந்த சில வருடங்களாக அரசாங்கம் யாழிலுள்ள வைத்திய அதிகாரிகளின் வெற்றிடங்களை திட்டமிட்டு நிரப்பாது தவிர்த்து வருகின்றது. உதாரணமாக உள்ளகப் பயிற்சியை முடித்த வைத்தியர்களுக்கு நியமனம் வழங்குவதற்காக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட வெற்றிடங்கள் பற்றிய பட்டியல்களில் யாழப்பாணத்தில் உள்ள வெற்றிடங்கள் குறிப்பிடப்படவில்லை. விடுவிக்கப்படாத வன்னிப் பகுதிகளின் வெற்றிடங்கள் மறைக்கப்படுவது போலவே யாழ்ப்பாணத்தின் வெற்றிடங்களும் மறைக்கப்படுகின்றன. யாழ்மருத்துவபீடத்திலிருந்து வெளியேறும் வைத்தியர்களுள் பெருமளவானோர் குடாநாட்டை விட்டு வெளியேறினாலும் இங்கு தங்கி நின்று கடமையாற்ற விரும்புவோர் கூட அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் இங்கு நியமனம் பெற முடியாமல் வெளியேற வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இதே போல் தாதிய ஊழியர்களுக்கு 70 வீதமும் துணை மருத்துவ சேவையினருக்கு 55 வீதமும் வெற்றிடங்கள் இருக்கின்றன.

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு மேலதிக மாணவரை உள்வாங்குவதன் மூலம் இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம் என்ற ஆலோசனைக்கு இன்று வரை அனுமதி வழங்கப்படவில்லை. மேலும் மாணவர்களைத் தெரிவு செய்யும் அதிகாரத்தைக்கூட பணிப்பாளரிடம் கையளிக்க அமைச்சு மறுத்து வருகின்றது.

துணை மருத்துவ சேவைப் பயிற்சி நெறிக்கு மாணவர்களை உள்வாங்குவதில் தமிழ் பேசுவோர் திட்டமிட்ட வகையில் கடந்த இரண்டு தசாப்த காலமாகப் புறக்கணிக்கப்படுகின்றனர். இனவிகிதாசாரத்தின் அடிப்படையிலும் விட மிகமிகக் குறைந்த எண்ணிக்கையான தமிழர்களுக்கே அனுமதி கிடைக்கின்றது. இவர்களுக்கும் கூட பயிற்சியின் முடிவில் பெரும்பாலும் தென்னிலங்கைக்கே நியமனம் வழங்கப்படுகின்றது.

புதிதாக நியமனம் செய்ய அனுமதி கிடைக்காததால் உள்ளூரிலேயே குறுகிய காலத்தில் பயிற்சி வழங்கப்படக்கூடிய சிற்றூழியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது. இதை விட சுகாதாரப் பரிசோதகர், மருத்துவ மாது, குடும்ப சுகாதார சேவையாளர்களுக்கும் பாரிய பற்றாக்குறை காணப்படுகிறது.

### மருந்துத் தட்டுப்பாடு

1990முதல் குடாநாட்டில் மருந்து வகைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவி வருகின்றது. 1996 இன் பின்னரும் கூட இதில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. சுகாதார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் கடைப்பிடிக்கும் நடை முறைகளினாலேயே இந்தத் தட்டுப்பாடு உருவாக்கப்படுகின்றது. குடாநாட்டிற்கு மருந்துகளைக் கொண்டு வர பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என்ற விதி அமுலில் உள்ளது. பாதுகாப்பு அமைச்சு கோரப்பட்ட மருந்துகளின் அளவுகளில் வெட்டிக் குறைப்புகளைச் செய்து காலதாமதத்தின் பின்பே அனுமதி தருகின்றது. சில சமயம் இவ்வனுமதி கிடைக்கும் போது சில மருந்துகள் சுகாதார அமைச்சின் களஞ்சியத்தில் (ஏற்கனவே கையிருப்பு முழுவதும்) ஏனைய பகுதிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு விடுவதால் இல்லாமற் போய் விடுகின்றன.

யாழ்ப்பாணம் 'விடுவிக்கப்பட்ட பிரதேசம்' என்பதால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்படவேண்டும் என்ற விதியை நீக்குமாறு பல தடைவைகள் கோரப்பட்ட போது இன்று வரை அவ்விதி தளர்த்தப்படவில்லை.

அவசர உயிர் காப்பு மருந்துகளோ ஒட்சிசன் சிலிண்டர்களோ முடிந்து விட்டாலும் கூட அவசரமாக அவற்றைத் தருவிக்க முடியாதவாறு மேற்படி நடைமுறைகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. அத்துடன் அவசர நிலையிலும் கூட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாராந்த கப்பற் சேவையில் மட்டுமே இவற்றை எடுத்துவர முடியும்.

யாழ்ப்பாணத்தின் வைத்தியசாலைகளில் பல்வேறு வகையான மருத்துவ உபகரணங்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. தெற்கின் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள நவீன உபகரணங்கள் இங்கு வழங்கப்படுவதில்லை. வெளிநாடுகள் சர்வதேச உதவி நிறுவனங்கள் அன்பளிப்பாக வழங்கிய உபகரணங்களைக் கூட இங்கு தருவிக்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற முடியாதுள்ளது. இதனால் சில பொருள்கள் கொழும்பிலேயே தேங்கி உள்ளன. அல்லது சில பொருள்கள் பல வருடங்களின் பின் பழுதடைந்த நிலையில் வந்து சேர்கின்றன (உதாரணமாக 10 வருடங்களின் பின் அண்மையில் உக்கிச் சேதமடைந்த நிலையில் வந்து சேர்ந்த மத்திய குளிரூட்டி நிலையக் கருவி யைக் குறிப்பிடலாம்).

### நிதி ஒதுக்கீட்டிலும் பாரபட்சம்

யாழ்.மாவட்ட சுகாதார சேவைக்கும் போதனா வைத்தியசாலைக்கும் வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி தெற்கின் சிறிய வைத்தியசாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது கூட குறைவாகவே உள்ளது. இதனால் பராமரிப்புகள், திருத்தங்கள், அபிவிருத்திகள் என்பன பெருமளவு பாதிப்டைந்துள்ளன. மேலும் புதிய கட்டுமாணங்களுக்கான நிதி ஒதுக்கீடும் அரிதாகவே உள்ளது.

யாழ்.போதனை வைத்தியசாலை 1996 முதல் மனிதக் கவசமாக இருந்து வருகிறது. இதனால் இன்றும் கூட சில கட்டடங்கள், பாதைகள் பாவனைக்கு அனுமதிக்கப்படாத நிலையில் உள்ளன. மேலும் கடந்த வருடம் யாழில் போர் உக்கிரமடைந்தபோத இங்கு கடமையாற்றிய சிங்கள வைத்தியர்களை பாதுகாப்புக்கருதி அரசாங்கம் விசேட நடவடிக்கை மூலம் தெற்கிற்கு அனுப்பி வைத்தது. அவர்கள் வெளியேறிய பின்னரும், தமிழ் வைத்தியர்களும் ஏனைய உழியர்களும் தொடர்ந்தும் கடமையாற்றினர். ஊழியர்களினதும் நோயாளர்களினதும் பாதுகாப்புக் கருதி அயலில் இருக்கும் இராணுவ முகாமை அகற்றி வைத்தியசாலையையும் அதன் சுற்றாடலைவயும் போர்த் தவிர்ப்பு வலயமாக்கி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற எமது நியாமான கோரிக்கை இன்று வரை கருத்தில் கொள்ளப்படவில்லை.

இப்படியான கடுமையான சூழலில்தான் யாழ்பாணத்தின் சுகாதார சேவைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் வடக்கு - கிழக்கில் கடமையாற்றுகின்ற தென்னிலங்கையை வசிப்பிடமாகக் கொண்டு (அதாவது சிங்கள) வைத்திய அதிகாரிகளுக்கு மட்டும் விசேட கொடுப்பனவு, ஆயுள் காப்புறுதி, போக்குவரத்து வசதியும் செலவும். விசேட விடுமுறைகள் என்பன அரசாங்கத்தால் விழங்கப்படுகின்றன. இவற்றை இனப்பராபட்சம் இன்றி அனைத்து வைத்திய அதிகாரிகளுக்கும் வழங்க வேண்டும் என்ற எமது கோரிக்கையை அரசாங்கம் ஏற்க மறுத்து வருகிறது.

கடந்த வருட இறுதியில் மட்டக்களப்பில் கடமையாற்றிய டாக்டர் டியூக் அருள்பிரகாசம் என்ற தமிழ் வைத்திய அதிகாரி குண்டு வெடிப்பில் பலியானார். இவரின் உயிரிழப்பைக் காரணமாகக் கூறியே வடக்கு - கிழக்கில் கடமைாற்றும் சிங்கள வைத்தியர்களுக்கு மட்டும் மேற்படி சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் அதே சூழலில் கடமையாற்றும் தமிழ் பேசும் வைத்திய அதிகாரிகளுக்கு இவை வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்லாது டாக்டர் அருள் பிரகாசம் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்பதால் அவரது குடும்பத்தினருக்கு இழப்பீடுகள் எதையும் வழங்க அரசாங்கம் மறுத்துவிட்டது.

### பலன் ஏதும் இல்லை

அரசாங்கம் இவ்வாறு பாராபட்சமாக செயற்படுவது பற்றி பல மட்டங்களிலும் நாம் முறையிட்டுள்ளோம். அடையாள வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டுள்ளோம். ஆனால் இன்று வரை எமது கோரிக்கை ஏதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை அதே வேளை யாழ்.மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாக கூறிக்கொள்பவர்களோ எம்மால் எடுத்துக்கூறப்பட்ட நெருக்கடிகளைப் பற்றி கருத்தில் கொள்ளவில்லை. நாம் குரல் கொடுத்த போது எமக்கு ஆதரவும் தரவில்லை. மாறாக அரசாங்கத்துக்கு எதிரான அவதூறுப் பிரசாரத்தில் ஈடுபடுவதாக எம்மீது கண்டனம் கூறப்படும் நிலையே ஏற்பட்டது.

இத்துடன் நாம் எம்மை மட்டும் நேரடியாகப் பாதிக்கும் வகையில் இனரீதியாகப் பாகுபாடு காட்டி வழங்கப்படும் விசேட கொடுப்பனவு வழங்கப்படுவதை வன்மையாக்க கண்டித்தும், பாகுபாடு இன்றி அனைவருக்கும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். சுகாதார அமைச்சுக்கு உரிய கால அவகாசம் வழங்கப்பட்டும் கூட இன்று வரை அவர்களிடமிருந்து பதிலேதும் வரவில்லை. இவ்விசேட கொடுப்பனவை இனப்பாரபட்சம் இன்றி வழங்குவோம் என அமைச்சு உறுதி தருவதன் மூலம் எமது போராட்டத்தை சுமுகமாகத் முடித்து வைக்க முடியும்.

தவிர்க்கமுடியாத நிலையில் நாம் மேற்கொண்டுள்ள போராட்டத்தினால் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களுக்கு மனம் வருந்துகின்றோம். - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-5)

## வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 10ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

(194610ஏ)

### கரவெட்டி

(157966ஏ) (158176ஏ) (165018ஏ)
(165018பி) (177989ஏ) (177989பி)
(177989சி) (177996ஏ) (177996பி)
(180395ஏ) (180395பி) (181295ஏ)
(181335ஏ) (181335பி) (181335சி)
(181335டி) (181335ஈ) (181335எவ்)
(181335ஜி) (185658ஏ) (185748ஏ)
(185748பி) (188309ஏ) (189916ஏ)
(189916பி) (189958ஏ) (189996ஏ)
(189996பி) (190173ஏ) (190264ஏ)
(192614ஏ) (192617ஏ) (192664ஏ)
(192664பி) (192738ஏ) (192739பி)
(192739சி) (192739டி) (192739ஈ)
(192753ஏ) (192755ஏ) (192755பி)
(192756ஏ) (192765ஏ) (192787ஏ)
(192787பி) (192827ஏ) (192827பி)
(192828ஏ) (192828பி) (192828சி)
(192829ஏ) (192829பி) (193792ஏ)
(193811ஏ) (193856ஏ) (193883ஏ)
(193894ஏ) (193894பி) (193894சி)
(193901ஏ) (193904ஏ) (193904பி)
(193909ஏ) (193918ஏ) (193918பி)
(193918சி) (193926ஏ) (193963ஏ)
(193967ஏ) (194032ஏ) (194047ஏ)
(194048ஏ) (194049ஏ) (194049பி)
(194049சி) (194060ஏ) (194063ஏ)
(194063பி) (194095ஏ) (194095பி)
(194108ஏ) (194108பி) (194109ஏ)
(194109பி) (194109சி) (194109டி)
(194110ஏ) (194113ஏ) (194114ஏ)
(194123ஏ) (194124ஏ) (194124பி)
(194124சி) (194139ஏ) (194139பி)
(194139சி) (194139டி) (194148ஏ)
(194160ஏ) (194160பி) (194160சி)
(194165ஏ) (194165பி) (194175ஏ)
(194179ஏ) (194180ஏ) (194180பி)
(194190ஏ) (194494ஏ) (194494பி)
(194494சி) (194494டி) (194494ஈ)
(194497ஏ) (194499ஏ) (194513ஏ)
(194516ஏ) (194516பி) (194517ஏ)
(194517பி) (194521ஏ) (194536ஏ)
(194537ஏ) (194543ஏ) (194545ஏ)
(194549ஏ) (194553ஏ) (194560ஏ)
(194569ஏ) (194579ஏ) (194581ஏ)
(194581பி) (194581சி) (194581டி)
(194587ஏ) (194587பி) (194587சி)
(194587டி) (194587ஈ) (194587எவ்)
(194588ஏ) (194592ஏ) (194608ஏ)
(194608பி) (194612ஏ) (194613ஏ)
(194613பி) (194624ஏ) (194625ஏ)
(194625பி) (194632ஏ) (194632பி)
(194637ஏ) (194637பி) (194643ஏ)
(194658ஏ) (194663ஏ) (194675ஏ)
(194676ஏ) (194705ஏ) (194712ஏ)
(194712பி) (194743ஏ) (194743பி)
(194755ஏ) (194765ஏ) (194766ஏ)
(194766பி) (194780பி) (196513ஏ)
(196514ஏ) (196515ஏ) (196516ஏ)
(196517ஏ) (196521ஏ) (196524ஏ)
(196526ஏ) (196531ஏ) (196532ஏ)
(196533ஏ) (196534ஏ) (196536ஏ)
(196537ஏ) (196538ஏ) (196539ஏ)
(196541ஏ) (196542ஏ) (196543ஏ)
(196544ஏ) (196545ஏ) (196548ஏ)
(196554ஏ) (196565ஏ) (196570ஏ)
(196591ஏ) (196635ஏ) (196652ஏ)

### மருதங்கேணி

(190293ஏ) (194022ஏ) (194022பி)
(194022சி) (194022டி)

### பருத்தித்துறை

(185370ஏ) (188206ஏ) (188519ஏ)
(188519பி) (188519சி) (188519டி)
(189810ஏ) (189810பி) (189999ஏ)
(190073ஏ) (190073பி) (190239ஏ)
(192508ஏ) (192508பி) (192551ஏ)
(192586ஏ) (192586பி) (192623ஏ)
(192638ஏ) (192638பி) (192687ஏ)
(192754ஏ) (192766ஏ) (192766பி)
(192766சி) (192776ஏ) (192776பி)
(192837ஏ) (192837பி) (193814ஏ)
(193814பி) (193814சி) (193814டி)
(193814ஈ) (193814எவ்) (193845ஏ)
(193927ஏ) (193927பி) (193994ஏ)
(193994பி) (194012ஏ) (194020ஏ)
(194020பி) (194020சி) (194040ஏ)
(194079ஏ) (194092ஏ) (194092பி)
(194099ஏ) (194131ஏ) (194151ஏ)
(194151பி) (194159ஏ) (194159பி)
(194163ஏ) (194163பி) (194163சி)
(194170ஏ) (194170பி) (194491ஏ)
(194495ஏ) (194495பி) (194496ஏ)
(194498ஏ) (194498பி) (194533ஏ)
(194533பி) (194534ஏ) (194585ஏ)
(194611ஏ) (194627ஏ) (194627பி)
(194627சி) (194634ஏ) (194644ஏ)
(194644பி) (194645ஏ) (194647ஏ)
(194648ஏ) (194648பி) (194670ஏ)
(194670பி) (194671ஏ) (194672ஏ)
(194679ஏ) (194679பி) (194679சி)
(194681ஏ) (194681பி) (194693ஏ)
(194703ஏ) (194703பி) (194741ஏ)
(194741பி) (194744ஏ) (194750ஏ)
(194757ஏ) (194757பி) (194757சி)
(194761ஏ) (194778ஏ) (196518ஏ)
(196523ஏ) (196525ஏ) (196546ஏ)
(196549ஏ) (196550ஏ) (196552ஏ)
(196553ஏ) (196555ஏ) (196556ஏ)
(196557ஏ) (196558ஏ) (196559ஏ)
(196560ஏ) (196562ஏ) (196563ஏ)
(196564ஏ) (196567ஏ) (196568ஏ)
(196569ஏ) (196581ஏ) (196582ஏ)
(196583ஏ) (196584ஏ) (196585ஏ)
(196586ஏ) (196587ஏ) (196588ஏ)
(196589ஏ) (196590ஏ) (196592ஏ)
(196593ஏ) (196616ஏ) (196656ஏ)
(199478ஏ)

(க-10)


# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் சக பணியாளர்
திரு.சிவகுரு அவர்களின் அன்பு மகன்

## சுஜிந்தன்

அவர்கள் அகாலமரணமடைந்ததையிட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/17068)

*தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,*
*கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,*
*யாழ்ப்பாணம்.* **யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

சுன்னாகம்

## புனித அந்தோனியார் பெருவிழா



சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
இன்று 12.06.2001 மாலை 4.30 மணிக்கு நற்கருணை விழாவும் நற்கருணைப் பவனியும் இடம்பெறும். நாளை (13.06.2001) புதன்கிழமை அந்தோனியார் திருநாள் பாடல் பூசை, திருச்சொரூப பவனி என்பன இடம்பெறும்.

*சுன்னாகம்.* (88955) – அந்தோனியார் பக்தன்.


## SPOKEN ENGLISH WITH GRAMMAR

*LECTURES BY:-* **Mr. M.A. HARI**

★ புதிய பிரிவு ஆரம்பம்
13.06.2001 புதன் மாலை 5 மணி
WED., MON. 5.p.m - 6.p.m.
DIRECTOR

## HARY'S INSTITUTE

(88944) KONDAVIL EAST, KONDAVIL.


## தேவை

பலசரக்குக் கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள சிட்டை எழுதுபவர் (பில் கிளாக்) ஒருவர் தேவை.

*தகைமைகள்:-*
- பலசரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்
- மூன்று மொழிகளும் தெரிந்தவராக
- வயது 30 - 50 உட்பட்டவராக
- கடையில் தங்கி நின்று கடமை புரிபவர்கள் விரும்பத்தக்கது

முடிவு திகதி:- 20-06-2001

*தொடர்பு:-* விளம்பர இல:-1305
மே/பா.உதயன்

(88962)

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

தெல்லிப்பழை

### அங்கத்தவர்களுக்கு ஓர் அறிவித்தல்

27.05.2001 அன்று கூடிய பொதுச் சபையில் தீர்மானித்தவாறு எதிர் வரும் (17.06.2001) ஞாயிற்றுக்கிழமை பொதுச் சபைக் கூட்டத்தை நடத்தவதற்குத் தவிர்க்கமுடியாத சில தடங்கல்கள் காரணமாக 17.06.2001 அன்று பொதுச் சபைக் கூட்டம் *நடைபெறமாட்டாது*. ஆகவே கூட்டத்துக்கான அடுத்த திகதி பின்னர் அறிவிக்கப்படும். இதனால் ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம்.

*தலைவர்.* (88952) *செயலாளர்.*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கந்தசாமி சிவபாலன்

(ஆசிரியர், கிளி/பளை மத்திய கல்லூரி)

மொட்டென தாயின் மடியில் 18.12.1969
பட்டென இறைவன் அடியில் 24.05.2000

திதி: 12.06.2001

*ஓர் ஆண்டு கடந்தாலும் உம்மை மறக்கமுடியவில்லை.*
*சீரான உம் வாழ்வை இடை நடுவில் காலனவன்*
*பறித்ததேனோ? அகத்தில் உம் நினைவு ஒளி வீசும்*

என்றும் உமது நினைவை மறக்காத
***ஆசிரியர், நலன்புரிச் சங்கத்தினர்,***
***கிளி/பளை மத்திய கல்லூரி.***

(88959)

## கண்ணீர் அஞ்சலி

எமது நலன்புரிச் சங்க உறுப்பினரும், எமது சக அலுவலருமான
திரு.வி.கே.அருந்தவநாதன் (கூட்டுறவுப் பரிசோதகர்)
அவர்களின் அன்புத் தந்தையாராகிய

### வைத்திலிங்கம் குமாரசிங்கம்

*(இளைப்பாறிய பொலீஸ் பரிசோதகர், வீமன்காமம் வடக்கு)*

அவர்கள் 2001-06-10 இல் வவுனியாவில் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயருறுகின்றோம்.
அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக்கொள்கின்றோம்.

யாழ்.கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்,
நலன்புரிக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள்,
கூட்டுறவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(சி17069)

## உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் 4 இல் ஆரம்பம்

ஜி.சீ.ஈ.(உயர்தரப்)பரீட்சை எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இந்தப்பரீட்சைக்கான ஏற்பாடுகள் தற்சமயம் நடைபெறுவதாகவும் -

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விரைவில் அனுப்பப்படவிருக்கின்றன. என்றும் - அவர் மேலும் சொன்னார். (உ-3)

## தெல்லிப்பழை பிரிவு ச.ச.நிலையங்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம்,ஜுன்12

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் இயங்கி வந்த சகல பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களும் தமது பதிவை உறுதிப்படுத்தும ஆவணங்களை வலி.வடக்கு பிரதேச சபை அலுவலகத்தில் சமர்ப்பித்து விவரங்களை உறுதி செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்கொடை வழங்கல் தொடர்பாகச் சில விவரங்கள் தேவைப்படுவதால் சேமிப்புப் புத்தகம், இறப்பர் முத்திரை, பதிவு இலக்கம் போன்ற வற்றையும் கொண்டு வருமாறு வலி. வடக்குப் பிரிவின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா தெரிவித்துள்ளார். (க-10)

## விவசாய பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,ஜுன்12

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் விவசாயத்தை மேற்கொண்டு வருவோருக்கான விவசாயப் பயிற்சி வகுப்புக்களை பட்டினிக்கு எதிரான இயக்கத்தினர் கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் துன்னாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்த விவசாயிகளுக்கு பட்டினிக்கு எதிரான இயக்கத்தினர் விவசாய உபகரணங்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (க-117)

## நல்லூர்ப் பகுதியில் விழிப்புக்குழுக்கள்

நல்லூர்ப் பகுதிகளில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் திருட்டுக்களைத் தடுப்பதற்காக விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோயில் வீதி, செட்டித்தெரு, நல்லூர் குறுக்கு வீதி, நாவலர் வீதி, பருத்தித்துறை வீதி ஆகிய பகுதிகளில் செயற்படும் இந்த விழிப்புக் குழுக்களை நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினர் உருவாக்கியுள்ளனர். (ஒ)

## தேவை

MS. WORD, EXCEL, ACCESS AND CORAL DRAW -9 தெரிந்தவர்களும் தமிழ், ஆங்கில ரைப் செற்றிங் அனுபவம் உள்ளவர்களும் உடன் தொடர்புகொள்ளவும்

*சாருஜன் கொமினிக்கேசன்*
கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.
T.P. 2961 (88960)


## ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த், சிம்ரன், கரண், விவேக் மற்றும் பலர் நடித்த

கண்ணெதிரே தோன்றினாள்

தினசரி காட்சிகள : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)

20.06.2001 முதல்

சிட்டிசன்

(C/17006)

## நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த

வானவில்

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)

(88951)


# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி கிருஷ்ணர்

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இளையதம்பி கிருஷ்ணர் 10.06.2001 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - செல்லாச்சி அவர்களின் புதல்வனும் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா - மாரிமுத்துவின் மருமகனும் சிவபாக்கியத்தின் கணவரும் இரத்தினம்மா, சுந்தரம்பிள்ளை, பொன்னம்பலம், செல்லமுத்து, சின்னம்மா, தங்கமுத்து ஆகியோரின சகோதரரும் இராஜமாதேவி, இராஜமாமங்கை, இராஜமாநந்தினி (ஜேர்மனி), மகேந்திரராஜா (சுவிஸ்), இராஜமா[illegible]சோதி (பிரான்ஸ்), குபேந்திரன் (கனடா), ஞானேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் புஸ்பராஜா, நகுலேஸ்வரன் (சவூதி), பற்குணம் (ஜேர்மனி), அருணசுந்தரி (சுவிஸ்), மகேந்திரன் (பிரான்ஸ்), பிரியதர்சினி (கனடா), சுபாஷினி ஆகியோரின் மாமனாரும் துசிலன், துளசி (பிரான்ஸ்), துர்சிகா, சுசிலராஜ், துஸ்யந்தன், ஹரிகரன் (ஜேர்மனி), கௌசிகா (ஜேர்மனி), துர்க்கா (பிரான்ஸ்), யாழினி (பிரான்ஸ்), நிசாந்தன் (பிரான்ஸ்), தாட்சாயினி (கனடா), திவ்யஹரிஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (13.06.2001) புதன்கிழமை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*75/5, பிக்கறிங்ஸ் வீதி,*
*கொட்டாஞ்சேனை,*
*தொ.பே.இல. 458038* (C/17070)

தகவல்:
கி.மகேந்திரராசா
(கண்ணா - சுவிஸ்)

## இராமுப்பிள்ளை பாலகிருஷ்ணன்

(இளைப்பாறிய ஆசிரியர்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை பாலகிருஷ்ணன் 09-06-2001 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் ஞானகலையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இலகடி திரு.திருமதி க.இராமுப்பிள்ளையின் மகனும் காலஞ்சென்றவர்களான வலந்தலை, திரு.திருமதி வீ.தம்பிப்பிள்ளையின் மருமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (88954)

தகவல்:-
சீ.தேவராசா J.P
(சகலன்)

## கணபதிப்பிள்ளை இராசையா

(ஓய்வு பெற்ற புள்ளி விவரவியல் அதிகாரி B.COM.)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசையா 10-06-2001 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், கனகேஸ்வரியின்(ஓய்வு பெற்ற உப.அதிபர்- இணுவல் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும், உமாகாந்தனின (மாணவன- இலத்திரனியலும் தொலைத் தொடர்பும் - வட்டுக்கோட்டை) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராசையா ஞானபூரணத்தின் அன்புமருமகனும், கதிரமலர், பஞ்சலிங்கம், அன்னலிங்கம், சின்னத்துரை மற்றும் சண்முகலிங்கம், இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் - கண்மணி, காலஞ்சென்ற சின்னமணி, கிளி, யோகராணி, ரஞ்சிதம், பரமேஸ்வரி, ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நேற்று (11-06-2001) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் பி.ப.3.00 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"உமாகிரி"*
*சிவகாமி அம்மன் கோயிலடி,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.* (88958)

தகவல்:-
மனைவி,மகன்.

## சின்னத்தம்பி கனகசபை (சின்ராசு)

பொற்பதி வீதி, கொக்குவிலைப் பிறப்படமாகவும் புத்தூரை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கனகசபை அவர்கள் 08.06.2001 வெள்ளிக்கிழமை அன்று புத்தூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா அவர்களின் அன்பு மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - அபிராமி அவர்களின் அன்பு மருமகனும் சுகந்தா (சுவீடன்), சுதாகரன், பிரபாகரன் (ஜேர்மனி), சுசிகரன், ஐங்கரன், சுவர்ஞ்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதீஸ்வரனின் (சுவீடன்) அன்பு மாமனாரும் றஞ்சிதம், சுந்தரலிங்கம், செந்தாமரை, ஆசா, கீரி, செல்வம், றாணி, கமலா, கற்கண்டு, நீலா, வவா, வசந்தி, ராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பகவதி, தங்கராணி, மற்றும் சிவகுரு, நல்லையா, கண்மணி, சத்தியமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2001) செவ்வாய்க்கிழமை புத்தூரில் உள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கிந்துசிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் வடக்கு,*
*புத்தூர்.* (88961)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி றோசம்மா பிலிப்பு

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோசம்மா பிலிப்பு 09.06.2001 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை பிலிப்பின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சாமிநாதர், கிறிசோஸ்திரம், ஞானசௌந்தரி, ஆசீர்வாதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலேந்திராவின் (லண்டன்) அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (12.06.2001) செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.123, பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (88964)

தகவல்:
ஆசீர்வாதம்மா றோக்
(சகோதரி)
திருமதி ஜான்சி மரியதாஸ்
(பெறாமகள்)

# தம் காவலில் உள்ளோரை படையினர் கொலை செய்வதற்கு உரிமையில்லை

## மனித உரிமைகள் கருத்தரங்கில் தளபதி பலகல்ல உரை

கொழும்பு,ஜூன்12

யுத்தமுனையில் சந்தர்ப்ப சூழ்நிலையில் எதிரியை படையினர் படுகொலை செய்யலாம். ஆனால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் படுகொலை செய்ய படையினருக்கு உரிமையில்லை.



இப்படிக் கூறியுள்ளார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடந்த படை அதிகாரிகளுக்கான மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இப்படிக்கூறினார்.

சுமார் 60 சிரேஷ்ட அதிகாரிகள் பங்குபற்றிய இந்தக் கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:-

சாவதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் தொடர்பாக படை அதிகாரிகளுக்கும் கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கும் போதிய அறிவு இல்லை. யுத்த முனையில் அநாவசியமான கொலைகளை அவர்கள் செய்யும் நிலைக்குத் தள்ளப்படுவதற்கு காரணம் இதுதான்.

படையினரின் அறியாமை காரணமாகவே மிருசுவிலில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

மிருசுவிலில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட 9 பேரே படுகொலை செய்யப்பட்டனர்; மற்றொருவர் தப்பி விட்டார்.

தாம் கைது செய்த நபர்களை படையினா சிலர் விசாரணை செய்த சமயம் அவர்களில் ஒருவர் புலி உறுப்பினர் எனத் தெரியவந்தது. அவரைச் சித்திரவதை செய்த சமயம் அவர் மயக்கம் அடைந்துவிட்டார்.

மயக்கம் அடைந்த அந்த நபர் இறந்து விட்டால் அவர் இறந்தமை தொடர்பான விரைங்களை ஏனையோர் வெளியிட்டு தம்மைக் காட்டிக் கொடுத்துவிடுவார்கள் என்ற பயத்தினால் ஏனையோரையும் அந்தப்படையினர் கொலை செய்ய எத்தனித்தனர்.

தப்பிச் சென்ற ஒரு நபர் வழங்கிய தகவலைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட படையினர் கைதுசெய்யப்பட்டு தடுதது வைக்கப்பட்டுள்ளனர். உண்மை வெளிச்சத்துக்கு வந்தது.

யுத்தப்பிரதேசத்தில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மதிக்காத படையினருக்கு எதிராகத் தண்டனை விதிக்கப்படும்.

ஒருவரைப் படையினர் கைது செய்தால் அவரைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கும்வரை பாதுகாக்க வேண்டியது கடமையாகும்.

விடுதலைப் புலிகள் செய்யும் அநீதிகள் எண்ணில் அடங்கா. என்றாலும் இராணுவம் செய்யும் ஒரு சில தவறுகள் ஊடகங்கள் மூலம் பிரசாரம் செயயப்பட்டு சர்வதேச ரீதியில் பெரிதாக்கப்படுகின்றன. இதனால் படையினருக்கு சர்வதேச ரீதியில் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது - என்றார் அவர்.

(உ-3-4)

# கொழும்பு மாநகர சபையின் 3 ஐ. தே. கவினர் கட்சி மாறினர்!

கொழும்பு,ஜூன்12

கொழும்பு மாநகர சபையின் ஐ.தே.க.உறுப்பினர்கள் மூவர், அக்கட்சியிலிருந்து விலகி பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து கொண்டனர் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

ஏ.ஆர்.எம். அருஸ், சமந்த ரமுக்கணவே, சுமுது ரத்வத்த ஆகிய மூன்று ஐ.தே.க உறுப்பினர்களே நேற்று கட்சி மாறியுள்ளனர்.

இவர்கள், நகர அபிவிருத்தி, பொது வசதிகள் பதில் அமைச்சர் ஜகத் பாலசூரிய, பிரதியமைச்சர்கள் சந்தன பத்திரியாராய்ச்சி, மேவின் சில்வா ஆகியோரை வத்தரமுல்ல ஹெக்கிரியாயவில் சந்தித்து அவர்கள் முன்னிலையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சேர்ந்தனர்.

(உ-ஒ)

# மேலும் 8 கைத்தொழில் பேட்டைகளை அமைக்க கைத்தொழில் அமைச்சு முடிவு

கொழும்பு,ஜூன்12

கிராமிய கைத்தொழில் திட்டத்தின்கீழ் மேலும் 8 கைத்தொழில் பேட்டைகள் நிறுவப்படவுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாத்தறை, இரத்தினபுரி, குளியாப்பிட்டி, ஹிக்காப்பொல, திருகோணமலை போன்ற இடங்களில் அமைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அவற்றின் மூலம் 23 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க முடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்கனவே 16 கைத்தொழில் பேட்டைகள் இருக்கின்றன எனவும், தற்போது அமைக்கப்படவுள்ள 8 கைத்தொழில் பேட்டைகளும் வெற்றிகரமாக இயங்கினால் நாட்டின் அபிவிருத்தி நிலை உயரும் எனவும் கைததொழில் அபிவிருத்தி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(உ-3-4)

பொருளியற் கல்லூரி
A/L 2002
வணிகக்கல்வி
V.MURALEE
யாழ்ப்பாணம்
சனி - ஞாயிறு
பகுதி I - 9.00
பகுதி II - 12.00
வினாவிடை - வியாழன்-3.30
இணுவில்
பகுதி I - செவ்., வியா. 4.30
பகுதி II - சனி, ஞாயிறு-4.00
(88920)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
முரளி - ரம்பா நடித்த
ஆனந்தம்
(பிரதி உடன் பெறலாம்)
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
(88963)

விஷேட சலுகை விலையில்
MIPAQ PENTIUM III 733 MHZ
- Gigabyte Main Board
- 64 MB Ram
- 20.4 GB HDD
- 8 MB AGP
- 14" Monitor
- ATX Power
- PS/2 Keyboard & Mouse
- 52X CD-Rom
- 32 Bit Sound Card, Speakers
- 56 K Modem
MIPAQ CELERON 566 MHZ And MIPAQ CYRIX 333 MHZ With above configuration
Rs. 59,500.00 Upwards
யாழ்.நகரில்
Intel Pentium 4
Rs. 110, 000/=
மட்டுமே
Printers, UPS,Scanners
மிக்க் குறைந்தவிலையில்
Sole Agent For MPAQ Computers In Srilanka.
MICRO PC SYSTEMS
No. 15, 36th Lane, Wellawatte, Colombo - 06.
Telephone : 074 - 513235, 074 - 516764
Branches
No. 82, New Chetty Street Kotahena, Colombo - 13 Telphone : 074 - 619673 Web : www.mipaq.com
No. 09, Modern Market Hospital Road, Jaffna. Telphone : 021-2067

## சம்பந்தர் சுவிஸ் பயணம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் சுவிற்ஸர்லாந்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் சுவிற்ஸர்லாந்துக்குச் சென்ற அவர் அங்கு பல முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-4)

## விண்ணப்பம்

கொழும்பு,ஜூன்12

பாடசாலைகளில் ஆண்டு ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (-3)

## நாடாளுமன்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் போன்றவற்றின் நியாயமற்ற நிபந்தனைகளுக்கு இணங்குவதை விட ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசு அமைப்பது நல்லது என பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க குறிப்பிட்டார் எனக் கூறப்படுகின்றது.

ஆனால் இந்த யோசனையை ஏற்க ஐ.தே.கட்சி அடியோடு மறுத்து விட்டதாகக் கூறப்படுகின்து.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்முனை கரையோர மாவட்டக் கோரிக்கைக்கு இணங்காவிட்டால் நெருக்கடி ஏற்படும் என்பதை உணர்ந்துகொண்டுள்ள அரசு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களான அமைச்சர்களான ரவூப் ஹக்கீமையும் ஜனா பேரியல் அஷ்ரப்பையும் பிரித்து வைக்கும் தந்திரத்தைக் கையாள்கிறது. ஆனால் இந்தத் தந்திரம் ஜனாதிபதியைத் திருப்பித் தாக்கி விடக்கூடும் என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் கருதுகின்றன.

வரக்தியடைந்துள்ள அரச தரப்பு எம்.பிக்கள் சிலரும் அமைச்சர்கள் சிலரும் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது அரசின் காலை வாரிவிடக்கூடும் என அரச தரப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் எச்சரிக்கை மணி ஒலிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்களின் பின்னடைவு போன்ற சிக்கல்களுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொண்டு அதில் தோற்று அதன் பின்னர் பொதுத்தேர்தலை எதிர்கொள்வதிலும்பார்க்க -

நாடாளுமன்றத்தை நேரத்துடனேயே கலைத்து, புதிய தேர்தலை எதிர்கொள்வது -

சிறந்தது என அரசாங்கத்தின் அரசியல் ஆலோசகர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரிகிறது. (உ-3)

# இளைஞர் ஆயுதம் ஏந்த அரசே காரணமாகும்

## இந்தியப் பத்திரிகையாளர் 'சோ' கூறுகிறார்

கொழும்பு,ஜூன்12

சாத்வீகப் போராட்டங்களையும் கோரிக்கைகளையும் இலங்கை அரசு மதிக்காததாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்.

இவ்வாறு தமிழகத்தில் இருந்து வெளியாகும் 'துக்ளக்' சஞ்சிகையின் ஆசிரியரும் இந்திய ராஜ்யசபா உறுப்பினருமான 'சோ' கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து ஒலிபரப்பாகும் தனியார் வானொலி ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சி முறையிலான அதிகாரப்பகிர்வே தீர்வாக அமைய முடியுமென்று 1972ஆம் ஆண்டு முதலே தான் வலியுறுத்தி வருவதாக சோ அப்போது கூறினார்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளைத் தான் வரவேற்பதாகவும் அவர் கூறினார்.

மேலும் 'சோ' கூறியிருப்பதாவது:-

ஒரு முறை விரலைச் சுட்டுக் கொண்டு விட்டதால், மீண்டும் இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு அவமரியாதைப் பட்டுவிடக்கூடாது என்பதில் இந்தியா மிகவும் உறுதியாகவிருக்கிறது.

பிரிட்டனில் புலிகளைத் தடை செய்ய, இந்தியாவின் அழுத்தம் இருந்ததாக ஆதாரபூர்வமாக தெரியாது. ஆனால் இந்தியா அவ்வாறு கோரிக்கை விடுத்திருந்தால் அது தவறில்லை.

ஏனெனில் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் பிராந்திய ரீதியான பாதுகாப்புக்கும் புலிகள் அச்சுறுத்தலாக உள்ளனர்.

பஞ்சாப்பில் இந்தியா விட்ட தவறையே, இலங்கை அரசு ஈழத்தமிழர் பிரச்சினையில் செய்துள்ளது. ஆரம்பத்தில் மிதவாதிகளால் நடத்தப்பட்ட சாத்வீகப் போராட்டங்களையும் கோரிக்கைகளையும் இலங்கை அரசு மதிக்காததன் விளைவே இன்றைய தீவிரவாதத்தின் வளர்ச்சி.

அஹிம்சை வழியில் எதையும் சாதிக்க முடியாது என்ற கருத்து உருவானதாலேயே இலங்கையில் தமிழ இளைஞர்கள் ஆயுதம் தூக்கத் தயங்கவில்லை - என்றார் அவர்.

(ஒ)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் இடம்பெற்ற சமயம் கடமையிலிருந்த பொலீஸார் இருவரினதும் மற்றும் சிலரினதும் சாட்சியங்களின் மூலம் புலிகளின் தாக்குதல் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

ஆனால் தாக்குதல் தொடர்பாகப் புலிகள் இதுவரை எந்தத் தகவலையும் வெளியிடவில்லை - இப்படி இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

*(மற்றுமொரு செய்தி 9ஆம் பக்கத்தில்)*

## பலகல்லவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக்குள் சில மட்டங்களில் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

எனினும் ஓய்வு பெற்ற ஒருவரை மீண்டும் இராணுவத்தில் சேர்த்து அவருக்குத் தளபதிப் பதவி வழங்குவது மிகவும் சிக்கலான விவகாரம் என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இதற்கிடையில் -

ஆஸ்திரேலியாவுக்கான ஸ்ரீலங்கா தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா ஆஸ்திரேலியாவுக்குச் சென்று பதவி ஏற்பதைப் பிற்போட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆஸ்திரேலிய நாட்டின் தூதராக அவர் பதவி ஏற்பதை அங்குள்ள ஈழத் தமிழ்க் குழுக்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றன.

இந்நிலையில் ஆஸ்திரேலியாவில் தமது பதவியை ஏற்பதற்காக கடந்த 5ஆம் திகதி அவர் அங்கு செல்ல இருந்த போதிலும் அதற்கு முன்னர் தன்னை சந்திக்குமாறு ஜனாதிபதி அவருக்குத் தகவல் தெரிவித்ததை அடுத்து அவர் தனது பயணத்தை பிற்போட்டதாக அறிய வருகின்றது. (உ-3-4)

## வர்த்தகர்களுக்கு இன்று முதல் படிவம் விநியோகம்

தென்மராட்சி.ஜூன் 12

சாவகச்சேரி வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வணிநிலையங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு பெறுவதற்கான படிவங்கள் இன்று முதல் மன்ற அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்ற அங்கத்தவர்கள் இப்படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து ஒருவார காலத்தினுள் வழங்குமாறு மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## டாக்டர்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட மேலதிகக் கொடுப்பனவு வழங்குவதில் அரசு தமக்கு பாரபட்சம் காட்டுவதாகத் தெரிவித்து அதனைக் கண்டித்து டாக்டர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் இன்றும் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரியில் வேலை நிறுத்தம் காரணமாக வெளிநோயாளர் பிரிவு முற்றாக ஸ்தம்பித்தது.

இதேபோன்று தெல்லிப்பழை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, அச்சுவேலி போன்ற இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளும் நேற்று செயலிழந்திருந்தன.

நோயாளர்களின் நன்மைகருதி இந்த வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டன.

(உ-3-5-139)

## தற்காலிகமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் மீதான தடையைத் தற்காலிகமாக வேனும் நீக்க முன்வருவதன் மூலம் சமாதான முயற்சிகள் தொடர்பில் அரசு தனக்குள்ள ஆர்வத்தை சர்வதேச சமூகத்துக்கு காண்பிக்கவேண்டும்.

அத்தகைய நடவடிக்கையானது ஏனைய நாடுகளில் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை தொடர்பான நியாயத்துடன் ஒருபோதும் முரண்படாது - என்றுள்ளது.

இதேவேளை நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை சமாதான முயற்சிகளில் இருந்து இலங்கையும் நோர்வேயும் புறந்தள்ளியது தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது அதிருப்தியை வெளியிட்ட மறுதினத்தில் 'டெய்லி நியூஸ்' இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பையா பாக்கியம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பையா பாக்கியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும் தர்மலிங்கம் (லிப்டன்), காலஞ்சென்ற நவரத்தினராசா, காலஞ்சென்ற ராஜேஸ்வரி, துரைராசா, ராசையா (பிரான்ஸ்), சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராணி, தனலட்சுமி, இலங்காதேவி, துரைராஜா, சரோஜினி தேவி, சிவசெல்வநாயகி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (12.06.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஆச்சி கடை',*
*இணுவில் தெற்கு.*

(C/17071)

தகவல்:
தர்மலிங்கம்
(மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.